When only
The best is
Good Enough

Buy
Solide Pumps

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூ 2/50

தரமானதே சிறந்தது
என்றால்

சொலிட்
பம்பையே வாங்குங்கள்

கடர். 4 சுக்கில ஞு ம்ரீ ஆவணி 05 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1409 முஹறம் பிறை 18 (21 - 08 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர். 222

## மாற்று ஏற்பாடு செய்யாமல் **********************************

# அமைதிப்படை வெளியேறினால்

# இலங்கை பிளவுபட்டுவிடும்!

## இதுவே கவலைதரும் விடயம் என்கிறார் இந்தியப் பிரதமர்

பெங்களூர், ஆகஸ்ட் 21

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் இருந்து இந்திய அமைதிப்படை வெளியேறிய பின்னர் இலங்கை அரசு என்ன செய்யப்போகிறது என இலங்கையிடம் கேட்டிருக்கிறோம்.

மாற்று ஏற்பாடு செய்யாமல் அமைதிப்படை வெளியேறினால் இலங்கை பிளவு பட்டுவிடும். இதுதான் எமக்கு கவலையைத் தருகிறது,

- இப்படி இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி நேற்றுத் தெரிவித்தார்.

ஆந்திர மாநிலம், கர்நாடக மாநிலம் ஆகியவற்றில் இரண்டு நாள் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று முன்தினம் மாலை பிரதமர் காந்தி புதுடில்லி திரும்பினார்.

அதற்கு முன்னர் செய்தியாளர் மாநாட்டில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''இந்திய அமைதிப்படை வெளியேறும் அதே சமயம் தமிழ் மக்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்கும் நடவடிக்கைகளை இலங்கை அரசு எடுக்க வேண்டும் என்று இந்தியா தெளிவு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பன்னிரண்டு கைதிகள் கடத்தப்பட்டனர்

கொழும்பு, ஆக. 21

பஸ் ஒன்றில் மாகோவில் இருந்து கல்கமுவ நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட பன்னிரண்டு கைதிகளும் இனந்தெரியாத நபர்களால் இடைவழியில் கடத்திச் செல்லப்பட்டனர்:

தேக்குவத்தை என்னுமிடத்தில் வைத்து பஸ் மறிக்கப்பட்டது.

கைதிகள் இறக்கப்பட்டு, மறித்தவர்கள் வந்த வாகனத்தில் அவர்கள் ஏற்றிச் செல்லப்பட்டனர்.

சிறைக்காவலர்கள் இது பற்றிப் பின்னர் பொலீஸில் முறையிட்டனர்; [உ-எ]

# 500 பேர் கைது!

கடந்த 24 மணித்தியாலங்களில் தென்பகுதியில் சுமார் 500 தீவிரவாத சந்தேக நபர்கள் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டனர் என்று அரசு நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டது.

இடம்பெற்ற சம்பவங்கள் சில வருமாறு:

★ நுகேகொடயில் ஓய்வு பெற்ற அரச ஊழியரான பிரேமா பெர்னாண்டோ (வயது 70) இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

★ பாமன்கடைப் பகுதியில் பௌத்தபிக்கு வேடமணிந்த இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர்.

★ பத்தேகமவில் உள்ள பௌத்த விகாரை ஒன்றில் இருந்து இரண்டு பௌத்த பிக்குகள் இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டனர். (ஒ-எ)

## பாடசாலைகளை திறப்பது குறித்து இன்னும் முடிவில்லை

கொழும்பு, ஆக 21

பாடசாலைகளை மீண்டும் எப்போது திறப்பது. என்பது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்று கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த 14 ஆம் திகதியில் இருந்து ஆசிரியர்கள் பாடசாலைக்குச் சென்று வருகின்றனர்:

''மாகாணக் கல்விப் பணிப்பாளர்களிடம் இருந்து அறிக்கைகளை எதிர்பார்த்து உள்ளோம்.

''பாடசாலைகளை மீண்டும் திறப்பது பற்றிய இறுதி முடிவு பாதுகாப்புக் கமிட்டியினால் எடுக்கப்படும்'' – என்று அப்பேச்சாளர் மேலும் சொன்னார். (ஒ-எ)

## சென்னையில் இலங்கை அமைச்சர்

சென்னை, ஆக. 21

தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வெளியுறவு துணை அமைச்சர் ஜோன் அமரதுங்கா நேற்று சென்னை சென்றடைந்தார்.

விஜயத்தின் நோக்கம்பற்றி விவரம் வெளியிடப்படவில்லை.

## முச்சந்தி முரளி



உள்நாட்டிலே உறவு ஏற்படாமல் மற்றைய நாடுகள் உதவி என்ன பிரயோசனம்...?

## ரயில்வே ஊழியர்கள் விடுவிப்பு

கொழும்பு, ஆக. 21

கொழும்பில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட நான்கு ரயில்வே ஊழியர்களும் நேற்று விடுவிக்கப்பட்டனர். [உ-எ]

## விறகு வெட்டச் சென்றோர் சூட்டுக்குப் பலியாகினர்

வட்டக்கச்சி, ஆக. 21

விறகுக்காக காட்டுமரங்களை எரித்து வீழ்த்துவதற்கு இரவு நேரத்தில் காட்டுக்குச் சென்ற இருவர் படையினரின் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 8 மணியளவில் கிளிநொச்சி ஐயன்குளம் பகுதியில் இடம் பெற்றது.

பாஸ்கரசிவாஜி [வயது 41]. இ: சுப்பிரமணியம் [வயது 28] ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

இவர்களது சடலங்கள் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன. அங்கு விசாரணையின் பின் சடலங்களை உறவினர்கள் பொறுப்பேற்றனர். (உ-163)

## சுபநேரம்

[21 - 8 - 1989]

ஆவணி — 5 திங்கட்கிழமை

நக்ஷத்திரம்: ரேவதி

சுபநேரம்:

12-05 முதல் 01-35 வரை

ராகுகாலம்:

07-35 முதல் 09-05 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

## ஜனநாயகத்தைக் காப்பாற்ற

# இலங்கைக்கு உதவுங்கள்!

### மற்றைய நாடுகளிடம் ஜனாதிபதி கோரிக்கை

கொழும்பு, ஆக: 21

இலங்கைக்கு உதவும் நாடுகளின் தலைவர்களுக்கு ஜனாதிபதி பிரேமதாஸா தனிப்பட்ட ரீதியிலான வேண்டுகோள் ஒன்றை விடுக்க இருக்கிறார்:

இலங்கையில் ஜனநாயகத்தைக் காப்பாற்ற உதவும் நாடுகள் தொடர்ந்து நிதி உதவி செய்யவேண்டும் என்பதே அந்த வேண்டுகோளாக இருக்கும் என்று தகவலறிந்த அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கைக்கு உதவும் நாடுகள் அமைப்பின் கூட்டம் அடுத்த மாதம் பிரெஞ்சுத் தலைநகர் பாரிஸில் நடைபெற உள்ளது.

இந்த நாடுகளிடமிருந்து இலங்கை அரசு 7 கோடி 50 லட்சம் அமெரிக்க டாலர் நிதி உதவியை எதிர்பார்க்கிறது.

தொடர்ந்து உதவி செய்வதற்கு சர்வதேச நாணய நிதியம் விதித்த சில கட்டுப்பாடுகளைத் தொடர்ந்தே, ஜனாதிபதி பிரேமதாஸா தனிப்பட்ட ரீதியில் உதவும் நாடுகளின் தலைவர்களுக்குக் கடிதங்களை அனுப்பத் தீர்மானித்திருக்கிறார்.

அரசு உத்தேசித்துள்ள சில சீர்திருத்தங்களுக்கு சர்வதேச நாணய நிதியம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது:

ரூபாவின் மதிப்பை 33 சத

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கெக்கிராவ பொலீஸ் மீது தாக்கு; ஆயுதங்கள் அபேஸ்!

கொழும்பு, ஆக 21

கெக்கிராவ பொலீஸ் நிலையம் சனிக்கிழமை இரவு தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்கானது.

பொலீஸ் நிலையத்தில் இருந்த பல ஆயுதங்கள் அவர்களால் கைப்பற்றி எடுத்துச் செல்லப்பட்டன.

அப்போது நடந்த மோதலில் தீவிரவாதி என சந்தேகிக்கப்படும் ஒருவர் கொல்லப்பட்டார். பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவர் காயமடைந்தார்.

இறந்தவர் ஒரு வழிப்போக்கர் என்று ஏஜன்சிச் செய்தி ஒன்று தெரிவித்தது. (ஒ-எ)

## மாங்குளம், துணுக்காயில் நேற்று ஊரடங்கு அமுல்!

மாங்குளம், துணுக்காய் பகுதிகளில் நேற்று உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது.

நேற்று முன்தினம் காலை மாங்குளம் படை முகாம்மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்பது தெரிந்ததே.

அதை அடுத்தே நேற்று ஊரடங்கு அமுல் செய்யப்பட்டு இப்பகுதியில் தீவிர தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

எனினும் கண்டி வீதி போக்குவரத்திற்கு அனுமதிக்கப்பட்டது (ஒ-9)

## மண்டானில் மோதல்; நெல்லியடியில் தாக்குதல்!

மண்டான் வெற்றிலைக் காட்டுப் பகுதியில் நேற்று மோதல் சம்பவங்கள் இடம்பெற்றதாக அறியவருகிறது.

இம்மோதல்களின்போது பொது மக்களில் சிலர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டபோதிலும், ஊர்ஜிதமான விவரங்கள் ஏதும் இச்செய்தி எழுதும்வரை கிடைக்கவில்லை:

அதே சமயம் நேற்றுமுன்தினம் மாலை நெல்லியடியில் இடம்பெற்ற சம்பவங்களைத் தொடர்ந்து இரவும் மோதல்கள் நடந்ததாகக் கூறப்பட்டது.

'பரா' வெளிச்சத்துடன் பதில் தாக்குதல் இடம்பெற்றதாகவும் தெரியவருகிறது:

அச்சமடைந்த மக்கள் இரவோடிரவாக பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்தனர். (ஒ-160)

# ரஞ்சன் வல்வைக்கு வந்தார்

# மக்களை சந்திக்கமுடியவில்லை

வல்வெட்டித்துறை, ஆக: 21

நேற்று நண்பகல் 11 மணியளவில் வல்வெட்டித்துறைப் பகுதிக்கு விஜயம்செய்த வெளிவிவகார அமைச்சரும் பாதுகாப்பு துணை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜயரத்தினாவினால் அப்பகுதி பொதுமக்களை சந்திக்கமுடியவில்லை.

வல்வைப் பகுதியில் மக்கள் நடமாட்டத்திற்கு படையினர் கட்டுப்பாடு விதித்திருந்ததே இதற்குக் காரணமாகும்.

மருதடி, அம்மன்கோவிலடி, நெடியகாடு போன்ற பகுதிகளுக்குள் காலை 8 மணி முதல் நண்பகல் ஒரு மணிவரை மக்கள் உள்ளே செல்லவோ அல்லது வெளியே வரவோ அனுமதிக்கப்படவில்லை:

இதனால் வீதிகளில் மக்கள் நடமாட்டத்தைக் காண முடியவில்லை.

வல்வைப் பிரஜைகள் குழுத் தலைவர், வீட்டில் இருந்து வெளியே வந்தபோது படை அதிகாரி ஒருவர் அவரை வீட்டில் சென்று இருக்கும்படி பணித்ததாகக் கூறப்பட்டது.

அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தின கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் எல். எல். மெஹ்ரோத்திரா சகிதம் நேற்று வடக்கிற்கு விஜயம் செய்தார்.

இலங்கை இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்காவும் இக் குழுவில் இடம்பெற்றிருந்தார்.

பலாலி விமான நிலையத்தில் இந்திய அமைதிப்படைத் தளபதி ஏ. எஸ். கல்கத் குழுவை வரவேற்றார். பின்னர் வல்வெட்டித்துறை சம்பவங்கள் பற்றி ஜெனரல் கல்கத் விவரித்தார்.

அமைச்சர் அடுத்து ஈரோஸ் எம்.பி.க்களைச் சந்தித்துப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தநிறுத்தம் வரும்!

## வல்வையில் ரஞ்சன் தகவல்

வல்வெட்டித்துறை, ஆக 21

வடக்கு, கிழக்கில் விரைவில் யுத்த நிறுத்தம் ஏற்பட வழி வகுப்பேன்.

- இவ்வாறு நேற்று வல்வைக்கு விஜயம் செய்த அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன வல்வைப் பிரசைகள் குழுப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய போது தெரிவித்தாராம்:

அவர் இந்தக் கலந்துரையாடலில் தெரிவித்ததாவது:

வல்வையில் பாதிக்கப்பட்ட இடங்களில் ஒரு சில பகுதிகளைத்தான் என்னால் பார்க்க முடிந்தது. எனினும் ஏற்பட்டுள்ள தாக்கங்களை என்னால்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் அழைப்பு

கொழும்பு, ஆகஸ்ட் 21

நாட்டின் நன்மையைக் கருதி தாக்குதல்களைக் கைவிட்டு விட்டு, யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு முன்வருமாறு தென் பகுதி தீவிரவாதிகளுக்கு பிரதமர் டி. பி. விஜேதுங்க நேற்று அழைப்பு விடுத்தார்: (ஒ)

## ஒப்பரேசன் லிபரேசனில் பாதிப்புற்ற மக்களை ரஞ்சன் சந்தித்தாரா?

### ஈ. பி. ஆர். எல். எவ். கேள்வி

யாழ்ப்பாணம், ஆக 21

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின வல்வெட்டித்துறைக்கு விஜயம் செய்தது தொடர்பாக ஈ. பி. ஆர். எல். எவ். பத்திரிகை அறிக்கை ஒன்றை விடுத்திருக்கிறது.

இந்த அறிக்கையில் தென்னிலங்கையில் நாளாந்தம் மக்கள் படும் கஷ்டங்களும், அரசு படைகளாலும், தீவிரவாத சக்திகளாலும் மேற்கொள்ளப்படும் வன்செயல்கள், மற்றும் படுகொலைகள் குறித்தும் விவரிக்கப்பட்டிருக்கிறது.

இத்தகைய நிலைகளில் இந்த மக்களுக்கும், தான் சார்ந்த கட்சியின் பிரமுகர்களுக்கும் பாதுகாப்பு அளிக்க முடியாத பாதுகாப்பு அமைச்சர் வல்வையில் பாதிக்கப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஆர்மோனியம் இசைக்கருவி விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- பாலா கடை, 108, அரசடி ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (1566)

National G1 (Genlock) Panasonic A 2 வீடியோகமரா விற்பனைக்கு உண்டு: பாரத் வீடியோ சென்ரர், 51/1, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்: (1561)

எம்மிடம் அண்மையில் வெளியிடப்பட்ட மருத்துவ நூல்கள் [Medical Books] அதி நவீன கம்பியூட்டர் நூல்கள் [Latest Computer Books] கதைப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் மற்றும் சகலவிதமான வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். மண்டேலா ரேடர் [புத்தகசாலை] இல 02 பஸ் நிலையம், யாழ்ப்பாணம்: [1551]

## உடன் விற்பனைக்கு

நியூ மொடல் வெஸ்பா (இற்றாலியன்) 81 ஸ்ரீ P×150, லம்பிரட்டா 6 ஸ்ரீ (இற்றாலியன்) துவிச்சக்கரவண்டி என்பன உடனடி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: N. V. நாதன், 176, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி: (11740)

பழைய புத்தகங்கள் விற்கப்படும், வாங்கப்படும், Second Hand Book House, 13/6, Stanly Road. (முரசொலி, இலங்கை வங்கி முன் பட்டப் படிப்பு கல்லூரி லேன்) யாழ்ப்பாணம்: (1664)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புரொயிலர் (இறைச்சிக் கோழி) விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- ''இரத்தின பவனம்'', ஸ்டேசன்வியூ, மாவிட்டபுரம்: (1662)

## வீடுவளவு விற்பனைக்கு

நல்லூர் கல்வியங்காடு 3 ஆம் கட்டை மடத்தடி ஒழுங்கையில் சகல வசதிகளும் கொண்ட புதிய வீடும் அதனுடன் சேர்ந்த ஒற்றைப் பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு: விபரங்களுக்கு அங்கலின் ரெக்ஸ்ரைல்ஸ் 43, நவீனசந்தை, யாழ்ப்பாணம் (1650)

## தவறிவிட்டது

சந்தையா இராஜரட்ணம் மத்திய கிழக்கு வீதி. குருநகர்: இல. 460053048 V ஆகிய எனது அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (1565)

16 8-89 அன்று யாழ்ப்பாணம் அராலிக் கிடையில் J 0156363 இலக்க பாஸ்போட் மற்றும் பொருட்களுடன் கைப்பை ஒன்று தவறிவிட்டது: கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (1669)

அகஸ்ரீன் யூட் அலன் இல. 702220653, 788 பஸ்ஸில் இளவாலையில் இருந்து யாழ்ப்பாண பஸ் தரிப்புக்கு இடையில் பிரயாணத்தின் போது அடையாள அட்டை தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (1665)

## வாடகைக்குத் தேவை

சங்கானை மின்தறி நெசவாலைக்கு, 20 K.V.A, 3 Phase மின் இயந்திரம் (ஜெனரேற்றர்) வாடகைக்கு உடன் தேவை. தொடர்பு: மின்தறி நெசவாலை T.C. ஒழுங்கை, சங்கானை: (1657)

## Spoken English

வெளிநாட்டுப் படிப்பு, உயர்கல்வி போன்ற அத்தியாவசிய நோக்குடன் 30 தொடர் வகுப்புகள் சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 7.30-9.00 மணி வரை. ஆரம்பம்: 24-08-89 முன் பதிவு செய்யவும்: S. B. Iyar 12 வைமன் வீதி, நல்லூர்: [1550]

## A/L இரசாயன

108 Brown Road, A/L 90, A/L 91 இரசாயன வகுப்புகள்: ஆசிரியர்: சதீஸ். ஆரம்பம்: 25-08-1989 புதன் முதல்: (1667)

## A/L இரசாயன நூல்

ஆசிரியர் சதீஸ் அவர்களின் பின்வரும் நூல்கள் வெளியாகி உள்ளன. அடிப்படை இரசாயனம் பகுதி I. அடிப்படை இரசாயனம் பகுதி II, சேதன இரசாயனம் பகுதி II புத்தகசாலைகளில் கிடைக்கும். நேரில் பெறுவோர்க்கு விசேட கழிவு உண்டு: (1668)

## குத்தகைக்கு

யாழ். பெரியகடை வீதியில் 100 சதுரஅடிக் கடைகள் குத்தகைக்கு உண்டு. நேரில் வரவும், விபரங்களுக்கு:- அங்கலின் ரெக்ஸ்ரைல்ஸ் 43, பெரியகடை, யாழ்ப்பாணம்; (1651)

## வைத்தியம்

தொய்வு, பாரிசவாதம்; குடற்புண், மலச்சிக்கல் நரம்புத் தளர்ச்சி, இது போன்ற நோய்களை யோக வைத்தியத்தின் மூலம் குணமாக்கி நோயற்று வாழ்வீர்களாக: தொடர்பு: V. S. சோமசுந்தரம்: 95/14, ஸ்டேசன்லேன், யாழ்ப்பாணம்: (1618)

## தேவை

யாழ் நகரில் பொருட்கள் கொண்டு விற்பனை செய்வதற்கு ரூ: 1000/- பிணைப்பணம் கட்டக்கூடிய பெண் விற்பனையாளர்கள் தேவை: சிறந்த சம்பளம் வழங்கப்படும். வெளியிடத்தோருக்கு இருப்பிட வசதிகள் செய்து கொடுக்கப்படும். தொடர்பு 577. C/o Uthayan [1644]

## கோழிக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)

[Cobb] புரொயிலர் குஞ்சுகள் (23 - 08 - 89) புதனும் (Dekalb) பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் சேவற்குஞ்சுகள் (30 - 08 - 89) புதனும் விநியோகிக்கப்படும்; (தடுப்பூசி போடப்பட்டது) முன் கூட்டியே பதிவு செய்க. இல: 9 கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அருகில்) குறிப்பு:- எங்கள் குஞ்சுகளுக்கு இரவில் லைட் அவசியமில்லை. (1606)

## TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ், ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள், Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்: (சி/3264)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



**அம்பிகைபாகன் அன்பழகன்**

(யா/ தொழில் நுட்பக்கல்லூரி மாணவன்)

தேற்றம்: 23 - 9 - 1971 மறைவு: 8 - 7 - 1989

பாதிநா டெங்களுக் கென்று
பக்தியோ டெழுந்தநீ
பாதியில் எமைவிட் டகன்றனை
பாசமார் அழகனே
நீதியோ நின்செயல் மீண்டு
வந்திடு அன்பனே;

22, இராமநாதன் வீதி, நாயன்மார்க்கட்டு, யாழ்ப்பாணம்:

அப்பா, அம்மா, சகோதரர், குடும்பத்தினர். (1628)

# 6 ஆம் மாத நினைவஞ்சலி



**இராசதுரை தியாகராசா**
**தியாகு (தேவன்)**

மலர்வு: 07 — 10 — 1961 உதிர்வு: 20 — 02 — 1989

பாசமுள்ள தமிழ்த்தாய் மகனே!
எங்கு நீ சென்றாயோ?
மாசியிலே அர்ப்பணமாகி விட்டியே!
உன்னை எப்பொழுது நாங்கள் காண்பதோ?
ஆறுமாதங்கள் ஆனாலும் ஆறுமோ
உன் நினைவலைகள் எம்மைவிட்டு அகலவில்லையே!

உமது பிரிவால் துயருறும்:

தாய், அண்ணா, அண்ணி, அக்கா, அத்தான், தம்பி, உறவினர்கள்.

நல்லூர். [illegible]

# நல்லூர் ஆலய முன்றலில் இலங்கை வங்கி கருமபீடம்

யாழ்ப்பாணம், ஆக. 21 நல்லூர் கந்தன் அடியார்கள் நலன் கருதி இலங்கை வங்கி நல்லூர் கந்தன் ஆலய முன்றலில் கருமபீடம் ஒன்றை அமைத்துள்ளது.

இன்று 21 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை இந்த கருமபீடம் இயங்கும்;

சேமிப்புச் சான்றிதழ் விற்பனை, சாதாரண மற்றும் சிறுவர் சேமிப்புக் கணக்குகள் ஆரம்பித்தல், வெளிநாட்டுக் காசோலைகளைப் பரிவர்த்தனைக்காக ஏற்றுக் கொள்தல் போன்ற சேவைகள் இந்தக் கருமபீடத்தில் நடைபெறும்;

இக் கருமபீடத்தில் சேமிப்புச் சான்றிதழ்களைக் கொள்வனவு செய்வோருக்கு அதிர்ஷ்டப் பரிசுகளும் வழங்கப்பட உள்ளன. என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# தொண்டர் ஆசிரியர்கள் தமது நிலைமை குறித்து

## மாகாண சபைக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஆக. 21 தமது பிரச்சினைகள் குறித்து தொண்டர் ஆசிரியர்கள் மாகாணசபை உறுப்பினர் ஊடாக மாகாண அரசுக்கு மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளனர். இந்த மகஜரில் 200 பேர் கையொப்பமிட்டுள்ளனர்:

மகஜர் விவரம் வருமாறு:-

கடந்தகாலங்களில் எமது மண்ணில் ஸ்ரீலங்கா இனவெறி அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்ட இராணுவ அட்டூழியங்களிற்கு மத்தியிலும் சிவில் நிர்வாக சீர்குலைப்புகளிற்கு மத்தியிலும் மாணவ சமுதாயத்தின் எதிர்காலத்திற்காக குறைந்த ஊதியத்துடன் இன்றுவரைக்கும் சேவை மனப்பான்மையோடு மனந்தளராது உழைத்து வரும் தொண்டர் ஆசிரியர்கள் அல்லது 'வசதிக் கட்டண ஆசிரியர்கள்' என்று கௌரவப் பெயர் கொண்டு அழைக்கப்படும் மக்கள் தொண்டர்களே நாம்.

எங்களை உங்களுக்கு நன்கு தெரியும் என்றாலும் எம்மை ஞாபகப்படுத்திக் காட்ட வேண்டிய நிலைமையை இட்டு வருந்துகின்றோம்; இருந்தாலும் நீங்களே எம்மைப் புரிந்து கொள்ளக்கூடியவர்கள் என்ற அடிப்படையில் எமது இதயக்குமுறலை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றோம்:

நாம் மேற்குறிப்பிட்ட சீர்குலைப்புகளின் மத்தியிலும் எதிர்காலத்தின் மீதான நம்பிக்கையில் தெளிவுடன் செயல்பட்டு வந்தோம்.

எமது நம்பிக்கை வீண் போகாத வகையில் 'வரலாற்றுச் சக்கரம் ஒருபோதும் பின்நோக்கி சுழல்வதில்லை' என்ற தத்துவ உண்மையின் படி எமக்கென எம்மால், எமது மண்ணில் மாகாண அரசு ஒன்று சரியான தலைமையின் கீழ் உருவானபோது நாம் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்தோம். எம்போன்ற உரிமைகள் மறுக்கப்பட்ட ஒவ்வொரு வகையினருக்கும் இனி ஒரு விடிவு உண்டு என்று நம்பிக்கை கொண்டோம் மாகாண அரசு-அது எமது அரசு என்ற வகையில் அதைப் பலப்படுத்தும் முயற்சியில் அனைத்து வழிகளிலும் பங்கு கொண்டோம்.

கடந்தகாலங்களில் ஸ்ரீலங்கா அரசிடம் இருந்து வெறும் கூலிபெறும் அதிகாரிகளாகவும், உத்தியோகத்தர்களாகவும் தாம் யாருக்காக சேவை செய்கின்றோம் என்ற உணர்வு சிறிதளவும் இன்றி செயற்படுகின்ற மனிதாபிமானமற்றவர்களின் புறக்கணிப்புகளை சுமந்துகொண்டு உரிமைகளைத் தட்டிக்கேட்க திராணியற்ற மானுட ஜென்மங்களாக வாழ்ந்தகாலம் மாறப்போகின்றது என்ற நம்பிக்கைக்கு சாவுமணி அடிப்பது போல 25, 000 ஆசிரியர்கள் நியமனம் வழங்குதல் அமைந்துள்ளதை காணமுடிகிறது.

நாம் ஏற்கனவே மாகாண அரசுக்கு எமது நிலைமைகளை விளக்கி கூறியபோது எமது ஆசிரிய வாழ்வுக்கான உத்தரவாதம் வழங்கப்பட்டிருந்ததை மீண்டும் உங்கள் கவனத்துக்கு வேதனையோடு ஞாபகப்படுத்துகின்றோம்.

ஆனால் இன்று உங்கள் உத்தரவாதம் வீணாக்கப்பட்டதைப்போல் எமது கற்பித்தல் அனுபவம், எமது திறமை மீதான புறக்கணிப்புகள் வேதனையளிக்கின்றன. இதை எம்மால் அனுமதிக்க முடியாது; எமது சேவைக்குக் கிடைத்த [illegible] வருந்துகின்றோம்;

எமது மக்களினதும், எமதும் எதிர்காலத்தின் எல்லாவிதமான உரிமைகளிற்கும் உத்தரவாதமளிக்க வேண்டிய மாகாண அரசு தனது கடமையினை மறந்துவிடக் கூடாது என்பதே எமது விருப்பமாகும்.

எனவே மாகாண அரசின் கல்வி அமைச்சர் என்ற வகையில் முதலமைச்சர் அவர்களின் கவனம் எமது பக்கமும் திரும்ப வேண்டும்; தொண்டர் ஆசிரியர்களாக பலவருடங்கள் சேவை செய்து வரும் எம்மை தொடர்ந்தும் வெறுமனே தொண்டர்களாக மட்டும் வாழவிடாது எமது பொருளாதார நிலைமைகளையும் கருத்திற் கொள்ள வேண்டும். இது எமது மாகாண அரசை நோக்கிய உரிமைக் குரல்;

எமது குரல் உங்கள் செவிகளை எட்டுமா? எமது எதிர்காலம் உறுதி செய்யப்படுமா?

இப்படி மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தையல் பயிற்சி

தாளையடி ஆக 21

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தையல் பயிற்சி, ஆங்கில வகுப்புக்களை நடத்துவதற்கு சர்வோதயம் நடவடிக்கை எடுத்துள்ளது: (இ - 144)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்: 22- 07- 1918

விண்ணில்: 21- 07- 1989

திதி: 21- 08- 1989

**செ. சிதேவிபிள்ளை**

''இதய அஞ்சலி''

அருமைமாள் செந்தில்மணி இங்கு இருந்தால் அருவியெனப் பாய்ந்திடுமே வெள்ளம்! பெருமைமிகு பெருமக்கள், பேரர், பேர்த்தி - பேரொலியே அதிர வைத்தார்; உனை நினைந்தே உரிமைமிகு கதிரேசன் உன்னடியைத் தொழுது கதிரேசன் நின்றே திருமுறை இசைத்தான்! உருகி அழும் கணவருடன் உற்றார், மற்றோர் ஒவென்ற சத்தஒலி கேட்டே திங்கோ அன்பெல்லாம் சொரிந்து என்னை ஆதரவாக இங்கே இன்பமாய் ராசன் என்றே எத்தனை அன்பு ஈந்தாய்! உன் பிரிவாலே நானும் உள்ளமே கதறி நித்தம் நன்நிலை இழந்தே ஏங்கி நலிகிறேன் மத்தம்மாவே!

உங்கள் பிரிவால் துயருறும்;
அன்பு மருமகன்
**செ. அருட்செல்வன் (றியாத்)**

மரணக் கிரியைகளிலும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் பங்கேற்று, எமது அறிவித்தல் கிடைக்காவிடினும் தாமாகவே அறிந்து எமக்கு அனுதாபச் செய்திகளையும் தாம் தாம் எமது குடும்பத்தோடு தொடர்பு கொண்டமைக்கும் நாம் என்றென்றும் நன்றி கூறி சிதேவியாரின் ஆத்ம சாந்திக்காக எங்கள் பூவற்கரை நாயகனை வேண்டி ஆராதிப்போமாக!

என்றென்றும் உங்கள் நினைவில் நிற்கும்:
திரு: வ. நா. செந்திநாதன் (கணவர்)

| மகள் | மருமகன் |
|---|---|
| திருமதி கமலாபரணம் | தர்மலிங்கம் |
| திருமதி தேவாபரணம் | தங்கராசா |

**பேரன் பேத்திமார்**

த சுந்தரவதனி, கமலினி, சிபாமினி, விசாகன், சந்திரமலர், சந்திரிக்கா. இந்திக்கா,
(மகன்) மா. பாரதிதாசன், கண்ணதாசன்,
(தம்பி) ஆ. க. கதிரேசன்

தகவல்;
திரு. வ. நா. செந்திநாதன்

(1569)

# கேள்வி அறிவித்தல்

## பிரதேச கல்வித்திணைக்களம் முல்லைத்தீவு

முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் கல்விப்புனருத்தாபன வேலைகளுக்கான கேள்விப்பத்திர அறிவித்தல்.

கீழ்க்குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் முல்லைத்தீவு பிரதேச கல்வித் திணைக்களக் கேள்விச்சபைத் தலைவரால் 1989 செப்டம்பர் மாதம் 7 ஆம் திகதி மு.ப 10. 00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்; ஒவ்வொரு வேலைக்கும் எதிரேயுள்ள தொகைக்கு அல்லது அதனிலும் கூடிய தொகைக்கு கட்டிட வேலை செய்வதற்கு என கல்வித்திணைக்களம், கட்டிடத்திணைக்களம், நீர்பாசனத்திணைக்களம் ஆகிய ஏதாவதொரு திணைக்களத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு 1989 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1ம் திகதி பி.ப 2 00 மணிவரை மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணமாக ரூ 50/ உம் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூ 250/- உம் (இருநூற்றைம்பது) செலுத் தியதன் பேரில் கேள்விப்பத்திரங்கள் முல்லைத்தீவு, பிரதேச கல்வித்திணைக்களத்தால் வழங்கப்படும். கேள்விப்பத்திரப்பணம் கேள்விவைப்புப்பணம் ஆகியவை வங்கிக் கட்டளை யாகவோ, அல்லது காசுக்கட்டளையாகவோ செலுத்தப்பட வேண்டும்; கேள்விகள் 1989 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7 ஆம் திகதி காலை 10. 30 மணிக்கு முல்லைத்தீவு கல்வித்திணைக்களத்தில் திறக்கப்படும். அச்சமயம் கேள்விக்காரர்கள் சமூகமளிக்கலாம். தெரிவு செய்யப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் ஒப்பந்தம் கைச்சாத் திடப்பட வேண்டும். தவறின் தெரிவு மறு அறிவித்தல் இன்றி ரத்துச் செய்யப்படும்.

கிராமோதய சபைகளுக்கும்/ கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கும் வேலைகளை வழங்கல்களில் ரூ 375. 000/ வரைக்குமான வேலைகளை, மேற்படி வேலைகளை செய்வதற்கு விருப்பமுடைய குறித்த சபைகளும்/ சங்கங்களும் தங்களின் விருப்பத்தை எழுத்துமூலம் 1989 ஆம் ஆண்டு ஆவணி 29 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு அறிவிக்க வேண்டும் இப்படி அறிவிக்கும்பொழுது இவர்களுக்கு கட்டிட நிர்மாணத்தில் உள்ள நிபுணத்துவத்தைப்பற்றி ஒரு அறிக்கையை மாவட்டக் கட்டிடப்பகுதி, பிரதமபொறியிலாளரிடமிருந்தும், தாங்கள் தற்போது செய்துகொண்டிருக்கும் வேலைகளின் விபரத்தையும் சங்க நிலைமை பற்றிய அறிக்கைகளையும் அப்பகுதி உதவி அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுச் சமர்பிக்க வேண்டும்.

மேலதிக விபரங்களை முல்லைத்தீவு பிரதேச கல்வித்திணைக்களக் கட்டிடப்பகுதிப் பொறுப்பாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

| பாடசாலையின் பெயர் | வேலைவிபரம் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|
| 1. கல்வித்திணைக்களம் | அலுவலகக் கட்டிடம் அமைத்தல் | 17, 00000/- |
| 2. முல்லைத்தீவு மகா வி | மாடிக்கட்டிடம் அமைத்தல் 990' X 0''25' X 0'' | 8, 00000/- |
| 3. விசுவமடு அ. த. க. பா | ஆசிரியர் விடுதிக் கிணறு | 4, 00000/- |
| 4. ஒலுமடு அ. த. க. பா | பாடசாலைக்கட்டிடம் 80'. 0 20'. 0 | 3, 00000/- |
| 5. நட்டாங்கண்டல் அ. த. க. பா: | பாடசாலைக்கட்டிடம் 80'X20'0 | 3, 00000/- |
| 6. விநாயகபுரம் அ. த. க. பா | பெரும் திருத்தவேலை | 2, 50000/- |

எஸ். எஸ் மனோகரன்,
பிரதிக்கல்விப்பணிப்பாளர்,
முல்லைத்தீவு;

பிரதேசக் கல்வித்திணைக்களம்,
முல்லைத்தீவு,
18- 08- 1989;

(C/3527)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

குறள்

குலஞ்சுடும் கொள்கை பிழைப்பின் நலஞ்சுடும்
நாணின்மை நின்றக் கடை:

பொருள்!

ஒருவன் கொள்கை தவறினால் அத்தவறு அவனுடைய குடிப்பிறப்பைக் கெடுக்கும்; நாணில்லாத தன்மை நிலைபெற்றால் நன்மை எல்லாவற்றையும் கெடுக்கும்:

உதயன்

இல. 392/2, நாவலர் வீதி, தொலைபேசி 24806 / 22078
யாழ்ப்பாணம்: 20 - 08 - 1989

# திராட்சை உற்பத்தி

மகா இலுப்பள்ளம விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் மேற் கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் போது அதிக விளைச்சல் தரக்கூடிய மூன்று திராட்சை இனங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன;

விவசாய அமைச்சரின் பணிப்பின் பேரில் நடத்தப்பட்ட இந்த ஆராய்ச்சியில் மொத்தம் பன்னிரண்டு புதிய இனங்கள் கண்டு பிடிக்கப்பட்டன;

இவற்றில் இருந்தே அதிக விளைச்சல் தரக்கூடிய— நோய்த் தாக்கம் குறைந்த மூன்று இனங்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றன:

வடபகுதி விவசாயிகளைப் பொறுத்தவரை இது மகிழ்ச்சி தரக்கூடிய செய்தி ஆகும்:

ஏனெனில் இலங்கையின் பிரதான திராட்சை உற்பத்திப் பிரதேசமாக வடபகுதி விளங்கி வருகிறது.

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் உள்ளூர் உற்பத்திகளில் அதிக நாட்டம் செலுத்தப்படாத காலத்தில் பெரும் அளவில் திராட்சைப் பழங்களும் அப்பிள் பழங்களும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டன:

1956 ஆம் ஆண்டு காலஞ்சென்ற எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்தில் இறக்குமதிக்குத் தடைவிதிக்கப்பட்டது: இதனை அடுத்து உள்ளூரில் திராட்சையையும் அப்பிளையும் உற்பத்தி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

உள்ளூர் அப்பிள் உற்பத்தி பயன் அளிக்கவில்லை: இதனால் முயற்சி கைவிடப்பட்டது: தற்போது அப்பிள் இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. ஆனால் திராட்சை உற்பத்தி எதிர்பாராத விதத்தில் பெரும் பயனை அளித்து வருகிறது.

வடபகுதி மக்களைப் பொறுத்த அளவில் வடபகுதி மக்களின் காசுப்பயிராக வெங்காயம், மிளகாய் புகையிலையுடன் திராட்சையும் ஒரு காலத்தில் விளங்கி வந்தது.

ஆனால் 1983 ஆம் ஆண்டுக் காலத்துக்குப் பின்னர் காலத்துக்குக் காலம் ஏற்பட்ட நெருக்கடிகளினால் திராட்சை உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டது.

★ போக்குவரத்துச் சீர்கேடுகளால் திராட்சைப் பழங்களைச் சந்தைப்படுத்த முடியாத நிலைமை,

★ நோய்களின் தாக்கம்.

★ காலம் தவறிப் பெய்யும் மழை:

★ வன்செயல்களின் போது தோட்டங்கள் கவனிப்பாரற்ற நிலையில் கைவிடப்பட்டது.

★ திராட்சை உற்பத்தியாளர்கள் உற்பத்தி தொடர்பான போதிய ஆலோசனைகளைப் பெற முடியாது போனது:

வடக்கில் திராட்சை உற்பத்தி வீழ்ச்சி அடைய இவையே பிரதான காரணங்களாக அமைந்தன.

தென் இலங்கைக்கு ஏற்றுமதி செய்வதையே ஒரே நோக்கமாகக் கொண்டு லட்சக் கணக்கான பணத்தை திராட்சை உற்பத்தியில் கொட்டியவர்கள் இறுதியில் பெரும் நஷ்டம் அடையும் நிலை ஏற்பட்டது:

ஆகவே அரசு புதிய இன திராட்சைகளை உற்பத்தி செய்துவடன் நின்றுவிடாது திராட்சை உற்பததியாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும்:

வடபகுதி தானே என்ற வழமையான அலட்சியப் போக்கால் பாதிக்கப்படுவது முழு நாட்டின் பொருளாதார வளமே தான்.

கிழக்கில்

# சிங்கள - முஸ்லிம் மக்களுக்கு ஆயுதம் வழங்கக் கோரிக்கை

கொழும்பு, ஆக. 21

தாக்குதலில் இருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள கிழக்கு மாகாணத்தில் வாழும் சிங்கள - முஸ்லிம் மக்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட வேண்டும் என்று கிழக்கு மக்கள் முன்னணி என்ற சிங்கள ஸ்தாபனம் பாதுகாப்பு அமைச்சைக் கோரியுள்ளது.

இக்கோரிக்கை விடுக்கப்பட்ட தகவலைக் கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்தன; (இ-எ)

நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

## குறைதீர்க்க வருபவனே!

ஆறுமுக மாகிவந்து
கூறுமடி யார்துயரம் போக்க வந்த வேலா!
நீறுபூசிக் கொண்டுன்னை
நெஞ்சுருக வணங்கிவிட்டால் நிறைவுவரும் வேலா!
கும்பிட்ட பக்தருக்கு
குறைதீர்க்க வருபவனே கொற்றவனே வேலா!
நம்பி வந்த மக்களுக்கு
நல்லவற்றைத் தருபவனே மால்மருகா! வேலா!!
வரங்கேட்ட கரங்களுக்கு
வாய்ப்புகளைத் தருபவனே வல்லவனே வேலா!
நலமுடனே நாம் வாழ
தடைநீக்கி வரவேண்டும் தங்கமயில் வேலா!

— அ. நிக்ஸன்

(இன்று நல்லைக்கந்தன் 16ஆம் திருவிழா)

## ஷெல் வீச்சில் பெண் காயம்

சாவெட்டி ஆகஸ்ட் 21

பருத்தித்துறையில் வெள்ளிக்கிழமை ஷெல்வீச்சுச் சத்தங்களும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்ட வண்ணம் இருந்தன.

பருத்தித்துறை கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையப் பக்கமாகவும் ஷெல் ஒன்று விழுந்து வெடித்தது. அப்போது இளம் பெண் ஒருவர் காயமுற்றார்.

காயமுற்ற பெண்ணுன செல்வி செல்லத்துரை சத்திய வேணி (வயது 22) மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார் (ஒ-70)

## கண்டியில் 20 பேர் கொலை!

கொழும்பு, ஆக 21

கடந்த சனிக்கிழமை கண்டி மாவட்டத்தில் 20 பேர் கொலையுண்டனர் என்று பி. பி. ஸி. வானொலி அறிவித்தது.

அவர்களில் பெண் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரும், இராணுவ வீரர் ஒருவரும் அடங்கியிருந்தனர் என்றும் அச்செய்தி கூறியது. (உ-எ)

## யாழ். பஸ்ஸில் ஜே. வி. பி. சுவரொட்டி

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 21

கொழும்பிலிருந்து யாழ் நோக்கி வந்த பஸ்களில் சிங்களத்தில் எழுதப்பட்ட — ஜே. வி. பியினரின் சுவரொட்டிகள் — ஒட்டப்பட்டிருந்தன. (ஆ-9)

## இதற்கும் தண்டனை!

கொழும்பு, ஆக 21

தாக்குதல் சம்பவம் ஒன்றில் காயமடைந்த ஊவா மாகாண முதலமைச்சர் பேர்சி சமரவீராவை ஆஸ்பத்திரிக்குச் சென்று பார்வையிட்ட தனியார் பஸ் சாரதி ஒருவர் வியாழக்கிழமை இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். (உ-எ)

யாழ் மாநகர சபைப்பகுதியில்

# உணவுப் பொருளைப் பரிசோதிக்க கருவிகள்எதுவும் இல்லை

## சுகாதாரத்துக்கு பங்கம் ஏற்படும் அபாயம்

யாழ்ப்பாணம், ஆக 21

யாழ்ப்பாணம் மாநகர சபைப் பகுதிக்குள் உள்ள தேநீர்க்கடைகளில் விற்பனை செய்யப்படும் உணவுப் பண்டங்களை உரிய முறையில் பரிசோதனை செய்வதற்கு ஏற்ற வசதிகள் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது:

இதனால் சுகாதாரத்துக்குப் பங்கம் ஏற்படும் அபாயம் இருந்துவருகிறது: மாநகர சபையில் உள்ள உணவுப் பொருட்களைப் பரிசோதனை செய்வதற்குரிய கருவிகள் இல்லாததால் சந்தேகத்துக்குரிய உணவுப் பொருள்களைக் கொழும்புக்கே அனுப்பி முடிவு அறியவேண்டியுள்ளது என்று யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு: வி. பி. பாலசிங்கம் தெரிவித்தார்;

பரிசோதனைக்கு இங்கு வசதி இல்லாததால் உணவுப் பொருள்கள் பற்றிய தகுதி உரியநேரத்தில் தெரியாமல் போகும் ஆபத்தும் இருந்து வருகிறது:

யாழ் பல்கலைக்கழக வைத்தியபீடத்தினர் உணவுப் பொருள்கள் சம்பந்தமான பரிசோதனைகளை இங்கு மேற்கொள்ள ஏற்பாடு செய்தால் நல்லது என மாநகரசபை ஆணையாளர் மேலும்தெரிவித்தார்; (இ-10-3)

## போக்குவரத்துத் தடை

பூநகரி ஆக: 21

மன்னாரில் அமைதிப்படையினருடனான மோதல் சம்பவத்தை அடுத்து மன்னாரிலிருந்து பூநகரியூடாக யாழ்ப்பாணத்திற்கு செல்லும் பவணிகள் வாகனங்கள் 18 ஆம் திகதி நண்பகல்வரை தடைப்பட்டிருந்தன:

மன்னார்-பூநகரிக்கு செல்லும் லொறிகளோ வேறுவாகனங்களோ பதற்றம் காரணமாக ஓடவில்லை; (இ - ரி)

## இடை நடுவில் நிற்கும் சந்தைக் கட்டட வேலை

பண்டத்தரிப்பு, ஆக: 21

அச்சுவேலி பொதுச் சந்தையின் கட்டடவேலைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளன.

1987 ஆம் ஆண்டு சந்தையை நவீனமயமாக்கும் திட்டம் வகுக்கப்பட்டு படவரைவுகளும் செய்து ரூபா 12லட்சம் நிதியும் ஒதுக்கப்பட்டது.

ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு ஒப்பந்தக்காரரிடம் உரிய நிபந்தனைகளுடன் வேலை ஒப்படைக்கப்பட்டது:

கட்டட வேலைகள் துரிதமாகத் தொடங்கி வளர்ந்தன. மலசலகூடங்கள் அமைக்கப்பட்டன: சந்தையின் ஒரு பகுதியான மரக்கறி சில்லறை வியாபாரத்துக்கான கட்டடமும் நிர்மாணிக்கப்பட்டது. மீதிக் கட்டடங்களுக்கான அத்திவாரங்கள் இடப்பட்டு தூண்கள் நிறுவப்பட்டன: தூண்கள் உயர்ந்தன அத்துடன் கட்டட வளர்ச்சி ஸ்தம்பித்துவிட்டது. (இ-120)

## குளிர்பானங்கள் விலை உயர்வு

இம்மாதம் 14 ஆம் திகதியிலிருந்து யானை மார்க் குளிர்பானங்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது: இதன்படி நெக்டோ, ஒரேஞ்பார்லி, கிறீம் சோடா, லெமனட், லங்காலைம் என்பவற்றின் சில்லறை விலை ரூபா 4 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஒரு ஜிஞ்சர் பியர் சோடாவின் விலை ரூபா 4/60 ஆகும் ஒரேஞ் கிறஸ், லெமன்கிறஸ், லைம்கிறஸ் என்பனவற்றின் சில்லறை விலை ரூபா 4/05 ஆகும்: (க - 37)

## இந்து இளைஞர் தீர்மானங்கள்

யாழ்ப்பாணம், ஆக. 21

வரும் கந்தசஷ்டி காலத்தை உலக உயிர் பாதுகாப்பு வாரமாக அனுஷ்டிக்க வேண்டும் என்று அகில இலங்கை இந்து இளைஞர் பேரவை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது:

இப்பேரவையின் கூட்டம் நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற சமயமே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கிராமந்தோறும் இந்து மாமன்றங்களை அமைத்தல், கிராமந்தோறும் கருத்தரங்கு நடாத்தி சமயக் கோட்பாடுகளைப் பரப்புதல் உட்பட பல முடிவுகள் எடுக்கப்பட்டன;

# கிளிநொச்சியில் பெரும் அளவு பாதிப்பு

வட்டக்கச்சி, ஆக: 2

கிளிநொச்சி மாவட்டத்தில் மின்சாரம் இல்லாததால் மருத்துவமனைகள், வங்கிகள் தொழிற்சாலைகள், விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதுடன் பல வேலைகள் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளன: கடந்த மின்தடையின் போது பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் இருந்த ஜெனரேட்டர்கள் மூலம் கிளிநொச்சி நகருக்கும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டது:

இம்முறை அது கிடைக்கவில்லை எரிபொருள்கள் நிரப்புவதற்கு மின்சாரம் இல்லாததால் வாகனங்களுக்கு எண்ணெய் நிரப்ப முடியவில்லை; இதனால் போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது: விவசாயத்திற்கு நீர் இறைப்பதற்கு மின்சாரம் இல்லாமலும் பொதுமக்கள் செய்வதறியாது இருக்கின்றனர்:

முன்பு செய்ததுபோல் பரந்தன் இரசாயக் கூட்டுத்தாபன ஜெனரேட்டர்களை இயக்கி உடன் மின்சாரம் வழங்கவேண்டும் என்று பொதுமக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குக் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். (ச-163)

## நாட்டுக் கூத்து

மண்டைதீவு ஆக. 21

யாழ் திருமறைக் கலா மன்றத்தினர் இம் மாதம் 23 ஆம் திகதி புதன் மாலை 4 - 30 மணிக்கு ''சங்கிலியன் நாட்டு கூத்து'' நிகழ்ச்சி ஒன்றை நடாத்த விருக்கின்றார்கள்.

இந்த நாட்டுக்கூத்து நிகழ்ச்சி யாழ்ப்பாணம் கொஞ்சேந்தி மாதா பேராலயத்தில் இடம் பெறும் (க - 88)

## 'சென்றி' முகாம்

சேமமடு. ஆக: 21

வவுனியாவிற்குப் போகும் வழியில் நொச்சிமோட்டை என்ற இடத்தில் இந்திய அமைதிப்படையினர் புதிய 'சென்றி' முகாம் ஒன்றை அமைத்துள்ளனர்: (க-37)

முல்லைத்தீவு பட்டின எல்லைக்குள்

# கவனிப்பாரற்ற நிலையில் வீதிகள்

முல்லைத்தீவு, ஆக. 21

முல்லைத்தீவு பட்டின எல்லைக்குள் உள்ள கரைச்சிக்குடியிருப்புவீதி, செல்வபுரம்வீதி, கள்ளப்பாடு வீதி உட்பட பல வீதிகள் கவனிப்பாரற்ற நிலையில் உள்ளன:

கிரவல் குவிக்கப்பட்டு மழையினால் கரைகின்றது.

ஆனால் வீதிகளைத் திருத்திச் செப்பனிடும் வேலை ஆரம்பிக்கப்படவில்லை.

முக்கியமாக செல்வபுரம் செல்லும் வீதியில் அமைந்துள்ள சின்னஞ்சிறுப் பாலம் பல காலமாகக் கவனிப்பாரற்றுக் கிடப்பதால் மழைகாலத்தில் மக்கள் நடந்து போக முடியாதவாறு பள்ளங்களில் தண்ணீர் நிரப்பி நிற்கிறது.

அத்துடன் முல்லைத்தீவு றோ: க. வித்தியாலயத்துக்கு அருகாமையில் உள்ள வீதி மழைகாலத்தில் வெள்ளத்தால் நிரம்பி செந்நிறமாகக் காட்சியளிக்கிறது.

பாடசாலைப் பிள்ளைகள் வேறு வழியை நாடவேண்டி உள்ளது. (க-92)

## மருந்து மோசடி

யாழ்ப்பாணம், ஆக: 21

மட்டக்களப்பு பொதுவைத்தியசாலையில் இடம் பெற்றதாக கூறப்படும் மருந்து வகைகள், மருத்துவ உபகரணங்கள் மோசடி தொடர்பான கணக்கெடுப்புகள் துரிதமாக நடைபெறுகின்றன.

இதில் மோசடிகள் கண்டு பிடிக்கப்பட்டால் சம்பந்தப்பட்டவர்கள் எவராக இருந்தாலும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆர்: ரி. அருளானந்தம் தெரிவித்தார். (இ-1)

## விலை உயர்வு

சேமமடு, ஆக. 21

சிசில் குளிர்சாதனப்பெட்டி [illegible] 15 ஆம் திகதி தொடக்கம் உயர்ந்துள்ளன: (க-37)

## சோதனைக்கு வந்தோர் வியப்பு

கடந்த 15 ஆம் திகதி வவுனியாவுக்கு வந்த பிரயாணிகள் தமது பயணப் பொதிகளைச் சுமந்த வண்ணம் சோதனைக்காக அமைதிப்படை முகாம் முன்பு நின்றனர்.

அவர்கள் எதிர்பாராத முறையில் அவர்களுக்கு தேநீர், குளிர்பானம் என்பன வழங்கப்பட்டன:

இந்திய சுதந்திரதினத்தை முன்னிட்டே இவை வழங்கப்பட்டன என்பதை பிரயாணிகள் பின்பு அறிந்து கொண்டனர்; (க- 37)

### சமய சந்நிதிகளில்

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஆக: 21

சண்டிலிப்பாய் - ஆலங்குளாய் ஸ்ரீ முருகமூர்த்தி தேவஸ்தான வல்லி தேவசேனா சமேத சண்முகப் பெருமான் மணவாளக்கோல நன்னாள் நவோத்திர சகஸ்ர சங்காபிஷேகம் நாளை 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும்: (க)

## பொங்கல்

யாழ்ப்பாணம், ஆக: 21

ஓட்டுசுட்டான் பனைநின்ற முத்துமாரி அம்பாள் பொங்கல் இன்று நடைபெறும்: (க)

## ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி உற்சவம்

யாழ்ப்பாணம், ஆக: 21

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை பகல் ஸ்ரீ பாகவதகீதை ஹோமமும் இரவு ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி உற்சவமும் மறுநாள் வெள்ளிக்கிழமை உறியடி உற்சவமும் நடைபெறும்: (க)

## திருவிழா

யாழ்ப்பாணம், ஆக 21

அச்சுவேலி பத்தமேனி தீர்த்தாங்குளப் பிள்ளையார் ஆலயத்தின் திருவிழா 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது:

தேர், தீர்த்தத் திருவிழாக்கள் முறையே 14ஆம், 15ஆம் திகதிகளில் நடைபெறும். (க)

## பால்மா விலை உயர்வு

சேமமடு, ஆக. 21

நெஸ்டோமோல்ட் பால் மாப் பைக்கட்டின் விலை அதிகரித்துள்ளது.

450 கிராம் பைக்கட்டின் புதிய விலை ரூபா 56/90: (க-37)

### வாசகர் திருமுகம்

## நெடுங் குளத்தின் நிலை

யாழ்: முஸ்லிம் வட்டாரத்தில் வடிகால் நீரையும் மழை நீரையும் உள்ளெடுக்கும் ஒரே ஒரு குளமாக 'நெடுங்குளம்' அமைந்துள்ளது: நாவலர்வீதி 76 ஆம், 78 ஆம் இலக்க வீடுகளுக்கிடையே அமைந்துள்ள ஒழுங்கையே குளத்திற்கான புகுமுக வழியாகும்:

அண்மையில் இவ்வழி ஒழுங்கை முடிவுடன் சுவரால் தடுக்கப்பட்டு குளமும் விரைவாக நிரப்பப்பட்டு வருகிறது மிக விரைவில் குளம் மறைந்து தனிப்பட்டவரின் சொத்தாக மாறிவிடும் என அஞ்சப்படுகிறது:

இதன் மூலம் எமது வட்டாரத்தின் பெரும்பகுதி மழை வெள்ளத்தில் ஆழ்ந்துவிடும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது: இது விடயமாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென கேட்டுக்கொள்கின்றோம்:

எம். எஸ்: நிலாம்,
ஏ: எல். பலீல்,
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## இப்படியும் திருட்டா?

எனது வீட்டில் இரண்டாவது தடவையாக திருட்டுப் போயுள்ளது. முதலாம் முறை உடுப்புகள், ஆயிரம் ரூபா பணமும், இரண்டாம்தடவை சைக்கிள், சமைத்த இறைச்சி சாப்பாடு பகலில் கொள்ளையடிக்கப்பட்டன: இவை நடந்து இரண்டு கிழமையாகிறது:

எனது வீடு ''பொம்பர்'' குண்டு போட்டதால் முற்றாக சேதம் அடைந்துள்ளது: இப்போது சிறு குடிசையில்தான் இருக்கின்றோம். என்னுடைய நிலைமை அறியாது ஈவிரக்கம் அற்ற முறையில் இக்கொள்ளையர் நடந்து கொள்கின்றார்கள்;

சி. நவரத்தினராசா,
வசாவிளான்.

## தபால் பெட்டிகள்

கோப்பாய்ப் பகுதியில் சில தபால் பெட்டிகள் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன: இவற்றில் போடப்படும் தபால்களை இலகுவில் திறந்து எடுக்கக் கூடியதாக உள்ளது; இதனை தபால் பகுதியினர் கவனிப்பார்களா?

— கவி,
கோப்பாய்.

## முகாம் நீக்கப்பட்டது

சேமமடு, ஆக: 21

வவுனியா கச்சேரிக்கு அருகே இந்திய அமைதிப்படையினரால் அமைக்கப்பட்டு இருந்த புதிய மினி முகாம் அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளது.

முகாமுக்கு அப்பால் வயல் வெளிகளில் முகாமிட்டிருந்த அமைதிப்படையினரும் அவ்விடத்தை விட்டு அகன்றனர். (க-37)

## கண்டதும் கேட்டதும்

''வாலைக் குழைத்துவரும் நாய்தான் - அது மனிதர்க்குத் தோழனடி பாப்பா!''

பாரதியார் இப்படிப் பாடினார்:

ஆனால் இன்று நாம் வீதிகளில் தினமும் காணும் நாய்களின் கதை வேறு:

நோய் பிடித்த சொறி நாய்களும், விசர் நாய்களும் கணக்கின்றி வீதிவலம் வருகின்றன: அவை வீதிகளைத் தம்மிஷ்டப்படி அசுத்தப்படுத்துகின்றன; வீதி விபத்துக்களுக்கும் காரணம் ஆகின்றன:

நாய்களின் தொல்லை குறித்து கிளிநொச்சியில் இருந்து ஓர் அன்பர் எழுதுகிறார்;

நகரில் நூற்றுக்கணக்கான நாய்கள் அனுதரவான முறையில் சுற்றித் திரிகின்றனவாம். நள்ளிரவில் அவை ஊளையிட்டு நித்திரையில் இருக்கும் மக்களைக் கதிகலங்க வைப்பதாகவும் அவர் தெரிவிக்கிறார்;

இரவிலோ - பகலிலோ நாய்கள் போடும் சத்தம் மக்களைத் திகிலடையச் செய்தாலும் உஷார்ப்படுத்தியும் விடுகின்றன:

— நாய் நன்றி உள்ள பிராணிதானே!

— செய்திலோலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலிவு விலையில் அறிமுகம்!

CHILTON TRIP SWITCH

மின்பொறியியலில் புகழ் மிக்க
OTTERMILL CHILTON LTD
ஸ்தாபனத்தாரின் தயாரிப்பு

சுந்தர்சன்

சந்தை முன். மானிப்பாய்.

(C/5121)

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும்
வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான

★ கம்பியூட்டர் கல்வி ★

Computer Programming In Basic Language
ஆரம்பம்: 26- 08- 1989
(சனி, ஞாயிறு வகுப்புகள்)
பயிற்சிக்காலம்: 3 மாதம்

Computer Programming in d Base IV
ஆரம்பம்: 24- 08- 1989
(செவ்வாய், வியாழன்)
பயிற்சிக்காலம்: 2 மாதம்

சேரும்பொழுது செலுத்த வேண்டியது
ரூ. 500/- மாத்திரம்

O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடிய நேர செய்முறைப் பயிற்சி I. B. M (COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும். தமிழிலும் விளக்கம் அளிக்கப்படும். பயிற்சி முடிவில் (DIPLOMA) சான்றிதழ்கள் வழங்கப்படும்.

குறிப்பிட்ட தொகை மாணவ மாணவியரே சேர்க்கப்படுவார்கள். ஆகையால் விண்ணப்பப் பத்திரத்தைப் பெற்றுப்பதிவு செய்யவும்.

விண்ணப்ப முடிவு நாள் 23- 08- 1989

UNIKCO
COMPUTER CENTRE
இல. 5 மின்சார நிலைய வீதி,
2-ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(உபதபாற்கந்தோர் அருகாமை) (C/3518)

டியூரோல்®

டியூரோலில் அடங்கியுள்ள இரும்புச் சத்து, உடலில் இரத்த விருத்தியை உண்டுபண்ணி இரத்த சோகை நோயின் அறிகுறிகளான சோர்வு, பலவீனம், மந்தம் என்பனவற்றை இல்லாமற் செய்து ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.




'செறி' சுவை கொண்ட, வளர்ந்தோருக்கான டியூரோல்®

ஆப்பிள் சுவை கொண்ட பிள்ளைகளுக்கான டியூரோல்®

தினமும் டியூரோல்® அருந்துங்கள்.
அது சுறுசுறுப்பானவர்களின் பானம்.

Pfizer

பைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.

# தென் ஆபிரிக்க சுற்றுப் பயணத்தில் கலந்து கொள்ள ரூபா 3 கோடி

## கபில்தேவுக்கு வழங்கப்பட இருந்ததாகத் தகவல்

புதுடில்லி ஆக 21

இந்திய கிரிக்கெட் வீரர் கபில்தேவுக்கு தென் ஆபிரிக்க சுற்றுப்பயணமொன்றில் கலந்து கொள்வதற்காக 3 கோடி ரூபாவை வழங்குவதற்கு தென் ஆபிரிக்கா முன் வந்துள்ளது.

இவ்வாறு இந்து நாழிதளில் வெளிவந்த பேட்டி ஒன்றில் கபில்தேவ் தெரிவித்துள்ளார்.

தென் ஆபிரிக்காவில் போட்டிகளில் கலந்து கொள்ளும் பட்சத்தில் தொகை குறிப்பிடப்படாத காசோலை ஒன்றையும் தனக்கு வழங்க முன் வந்துள்ளதாக கபில்தேவ் தெரிவித்தார்.

எனினும் எக்காரணம் கொண்டும் தான் தென் ஆபிரிக்கா செல்லப் போவதில்லை என அவர் உறுதிபடக் கூறினார்.

'தென் ஆபிரிக்காவுக்கான சுற்றுப் பயணமொன்றில் கலந்து கொள்வதற்காக பல இந்திய வீரர்கள், அணுகப்பட்டனர். எனினும் அவர்கள் அதை அக்கறைப்படுத்தாதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்' என்றும் கபில் தேவ் கூறினார்.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளுக்கான சுற்றுப் பயணங்களை மேற்கொண்டதற்காக ஆறு இந்திய வீரர்களுக்கு ஒரு வருட தடை உத்தரவைப் பிறப்பித்தது.

இத்தடை உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கு முன்னரே இந்திய வீரர்களை தென் ஆபிரிக்காவுக்கு அழைப்பதற்கான முயற்சி நடைபெற்றதாகவும் கபில் தேவ் தெரிவித்துள்ளார்.

[இ-6]

**விளையாட்டு அரங்கு**

# கிராம மட்டத்திலிருந்து சரியான தலைமைத்துவம் தோன்ற வேண்டும்

## மன்னார் பயிற்சி வகுப்பு நிறைவு விழாவில் உரை

மன்னார் ஆக 21

"சரியான தலைமைத்துவம் கிராம மட்டத்தில் இருந்து தோன்ற வேண்டும். அப்பொழுது மாவட்டமும் பயன் பெறும். வளர்ச்சி அடைந்த மாவட்டமாக மன்னார் மாவட்டம் விளங்க வாழ்வோதயம் போன்ற தொண்டு ஸ்தாபனங்கள் துணை நிற்றல் அவசியம்"

மன்னார் மாவட்டத்தில் வாழ்வோதயத்தினால் பறப்பாங்கண்டல் கன்னியர் மடத்தில் அளிக்கப்பட்டு வந்த பயிற்சி வகுப்பின் நிறைவு விழாவில் சிறப்புரை நிகழ்த்திய சமநல சேவை உதவி ஆணையாளரும் புனர்வாழ்வு புனர் அமைச்சு இணைப்பாளரும் ஆகிய திரு. க. கணேஷ் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தப் பயிற்சிக் காலத்தல் யுவதிகளால் தயாரிக்கப்பட்ட உடைகள், கைவினைப்பொருள்கள், அழகிய கேக் வகைகள் உணவுப்பொருள்கள் ஆகியவற்றைக் கொண்ட கண்காட்சியை பிரதம விருந்தினராகிய மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஏ. சி. செபநாயகம் சம்பிரதாயப்படி திறந்து வைத்தார்.

விவசாய திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு. தட்சணாமூர்த்தி சமநல சேவை உதவி ஆணையாளர் திரு. கே. கணேஷ் மன்னார் மாவட்ட வைத்திய அதிகாரி திரு. சிவபாதசுந்தரம் ஆகியோர் சிறப்பு விருந்தினராக வருகை தந்து மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்ததுடன் உரையும் நிகழ்த்தினார்கள்.

விழாத் தலைவரும் வாழ்வோதய இயக்குனரும் ஆகிய அருட் திரு. அல்பன்ராஜசிங்கம் அடிகளார் வரவேற்புரை நிகழ்த்தினர்கள்.

பயிற்சிக்குப் பொறுப்பாக இருந்து அதனைத் திறம்பட நடத்தி முடித்த அருட் செல்வி அஞ்சலின் பயிற்சி அறிக்கைகையை வாசித்தார்.

மன்னார் மாவட்ட குரு முதல்வரும் பரிபாலகருமாகிய அருட். திரு. சேவியர் குரூஸ் கும் உரை நிகழ்த்தினர்.

இவ்விழாவில் பாடல்கள் நடனம், "காணுவூர் கல்யாணம்" நாட்டுக்கூத்து முதலிய கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. இவற்றை உயிலங்குளம் பங்குத் தந்தை அருட் திரு. ஸ்ரனி தொகுத்து வழங்கினர்.

[க]

## விவசாயிகளுக்கு கடன் உதவி

சேமமடு, ஆக. 21

வவுனியா வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள புதுக்குளம் கிராம அபிவிருத்தி மன்றம் அங்குள்ள விவசாயிகளுக்கு மேட்டுப் பயிர்ச்செய்கைக்காக இவ்வருடம் கடன் வழங்க முன்வந்துள்ளது.

உலக தரிசன நிறுவனத்தால் வழங்கப்பட்ட பணமே இவ்வாறு விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட உள்ளது.

(க- 37)

## வவுனியா கச்சேரிக்கு மின்சாரம்

வவுனியாக் கச்சேரிக்கு மின்சார வசதி வழங்கப்பட்டுள்ளது. வவுனியா ஆஸ்பத்திரியில் இயங்கும் ஜெனரேட்டர் மூலமே இந்த மின்சார வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் இயங்க முடியாத நிலையில் இருந்த போட்டோ ஸ்ரற் இயந்திரமும் இயங்கத் தொடங்கி பிறப்பு, இறப்பு அத்தாட்சி வேலைகள் துரிதம் அடைந்துள்ளன.

(க-37)

BEACON STUDY CENTRE
உடுப்பிட்டி.


முன்னைய பாட நேர அட்டவணைப்படி சகல வகுப்புக்களும்

ஆரம்பம்: 21. 08. 1989
திங்கள் காலை 7. 00 மணி

விபரங்களுக்கு கல்வி நிலையத்தில் தொடர்பு கொள்ளவும்.

(1654)

**6 ஆம் மாத நினைவஞ்சலி**



தவமணிநாயகம் முரளிகிருஷ்ணா
(சிறைவாசன்)

வையகத்தில்: 24 - 11 - 1967
வரலாற்றில்: 21 - 03 - 1989

மறக்குலத்து மைந்தன் முரளிகிருஷ்ணாவுக்கு
ஆறுவது மாத நினைவஞ்சலி.

எந்நாடு என்னுரிமை என்மொழியே எனச் சாற்றி
பணிக்குலத்துக்காயுழைத்தமறக்குலத்துமைந்தனிவன்
தமிழ்த் தாக மீட்புக்கு சங்கொலி எழுப்பியவன்
எம்மை விட்டு எங்கேயோ தானோடி மறைந்து
விட்டான்.

எப்படி நாம் மறந்திருப்போம் எமதன்புக்
கிருஷ்ணாவை.

என்றும் அவன் ஆத்மா அமைதிபெறப்
பிரார்த்திப்போம்.

பெற்றோர், சகோதரர்,
சகோதரி.

மல்லாகம்.

VACANCY IN IDP

Interview will be held for the Post of Programming Demonstrators on
23 - 08 - 89 at 10 00 a.m.

Qualification
Fluent knowledge in English & Programming Experience in BASIC. D-BASE - III +, LOTUS 123 & Word perfect or word Star 2000 + Package Applications.

Contact:
Administrator,
I D P Computer Centre
342, K. K. S Road, JAFFNA.

★ Computer பயிற்சிகளுக்கான புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன.

[சி-3229]

வெளிநாட்டுப் பயணம்

★ அவுஸ்திரேலியா, ஜெர்மனி ★

அடுத்த ஜெர்மனி பயணம்
26. 08. 1989
விரும்புவோர் 21 ஆம், 22 ஆம் திகதிகளில் நேரில் சந்திக்கவும்.

★ சவூதி அரேபியா:
கிளினேர்ஸ், ஹவுஸ் டிரைவர், காப்பென்ரேஸ்.

★ ஓமான்:
ரெயிலேஸ்

★ குவைத்:
பணிப் பெண்கள், தாதிகள் (Nurses)

தொடர்பு:
திரு. க. இந்திரலிங்கம் (சந்திரன்)
நிரோஷன் என்ரபிறைஸ்
பருத்தித்துறை வீதி, மயிலிட்டி.
காங்கேசன்துறை.
(T. B. வைத்தியசாலைக்கு அருகில்)

(1634)

**இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி**



திருமதி கனகம்மா சின்னத்தம்பி
(கந்தர்மடம்)

ஜனனம்: 23 - 06 - 1918
அமரத்துவம்: 11 - 09 - 1987

திதி: 21. 08. 1989

குடும்பத்தின் குலவிளக்காய்
குங்குமத்தின் உறைவிடமாய்
உம் குலமக்களை காத்து நின்றுய்
சிறுபொழுதில் காலனும் - உம்
சிற்றுயிரைப் பறித்தானே!
ஓய்ந்ததுவே வைகை நதி
சாய்ந்ததுவே பெருவிருட்சம்
வைகை நாள் ஓய்ந்தாலும்
வானகமே அழிந்தாலும்
நீங்காது உம் நினைவு
தூங்காது எம் இதயம்

ஓம் சாந்தி!

கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

107, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(1548)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாட்டில்

## ஆறு கட்சிகள் கூட்டணி அ.தி.மு.க தலைமையில் அமைப்பு

சென்னை, ஆக. 20

இந்தியப் பொதுத்தேர்தலில் தமிழ்நாட்டில் அரசியல் கட்சிகள் அணிசேர்வது இறுதியாகிவிட்டது என்று அ தி மு க பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா தெரிவித்தார்.

தி மு கவின் நேசசக்திகள் எவை என்பது அடையாளங் காணப்பட்டுவிட்டன.

எமது (அ தி மு க) நேச சக்திகள் யார்என்பதும் தெரிந்துவிட்டன.

ஆறு கட்சிகளின் கூட்டணியாக அ தி மு க விளங்குகின்றது.

இந்தியாவில் பிரதமராக வர ராஜீவ் காந்தியைவிட வேறெவருக்கும் தகுதி கிடையாது:

இப்படி ஜெயலலிதா தெரிவித்தார். [எ]

### புஷ்ஷுக்கு ராஜீவ் அழைப்பு

வாஷிங்டன், ஆக. 20

இந்தியாவுக்கு விஜயம் செய்யும்படி அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது:

பிரதமர் ராஜீவ்காந்தி திரு. புஷ்ஷுக்கு இந்தியத் தூதர் யரன்சிங் மூலம் அனுப்பிய தனிப்பட்ட கடிதத்தில இந்த அழைப்பு விடுக்கப்பட்டது: (எ)

● ஆப்கனில்

## சோவியத் வீரர் உயிரிழப்பு குறித்து 'பிராவ்தா' கருத்து

மாஸ்கோ, ஆக. 20

1979 - 1989க்கு இடைப்பட்ட காலத்தில் ஆப்கானிஸ்தானில் சோவியத் யூனியன் 13 ஆயிரத்து 823 இராணுவ வீரர்களையும் அதிகாரிகளையும் இழந்தது:

குறிப்பிட்ட காலத்தில் சோவியத் ராணுவத்திற்கு ஏற்பட்ட உயிரிழப்பை சோவியத் அரசு முதல் தடவையாக ஆண்டுவாரியாக வெளியிட்டிருக்கிறது.

1984 ஆம் ஆண்டில் தான் 2 ஆயிரத்து 343 வீரர்களை சோவியத் அரசு இழந்தது.

சோவியத் பத்திரிகை 'பிராவ்தா' இந்த புள்ளிவிபரத்தை வெளியிட்டது.

ஆப்கனுக்கு சோவியத்துருப்புகளை அனுப்பும் முடிவு நாடாளுமன்றத்தின் அங்கிகாரமின்றி எடுக்கப்பட்டது ஒன்று என்றும் 'பிராவ்தா' தெரிவித்திருக்கிறது.

இப்படிப்பட்ட இரகசிய முடிவுகளை எடுப்பவர்கள் நாடாளுமன்றத்தில் தண்டிக்கப்படவேண்டும் என்று ஜனாதிபதி கோர்பச்சேவினால் நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர் கமிட்டி கூறியுள்ளது. (எ)


உ
சிவமயம்

### அறிவித்தல்

''தர்சினி வாசா'' புதுமனைப் புகுவிழா அழைப்பிதழ் 21 - 8 - 89 இன்று நடைபெற இருந்த கொண்டாட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தால் இடை நிறுத்தப்பட்டுள்ளது;

இப்படிக்கு:
த. மாசிலாமணி.
மனைவி: யோகம்மா.

தம்பாலை,
அச்சுவேலி.
(1570)



### அறிவித்தல்

யாழ் மாவட்ட
அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்

எமது சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 14- 09- 1989 ஆம் திகதி வியாழக்கிழமை சங்க மண்டபத்தில் நடைபெறும். இதற்கான முன்னறிவித்தல் சகல அங்கத்தவர்களுக்கும் தபால்மூலம் அனுப்பப்பட்டுள்ளது என்பதனை அறியத் தருகின்றோம்.

ச. சிவநேசன்,
செயலாளர்.

திருநெல்வேலி கிழக்கு
கோப்பாய்.

(சி/3518)



உ

### ★ திருமண அழைப்பிதழ் ★

அன்புடையீர்!

நிகழும் சுக்கில வருடம் ஆவணி மாதம் 5 ஆம் நாள் [21 - 08 - 1989] திங்கட்கிழமை பகல் 12.00 மணி முதல் 2.00 மணிவரை வரும் சுபமுகூர்த்தத்தில்

| எமது புத்திரன் திருநிறை செல்வன் சந்திரகுமார் அவர்கள் | ★★★★ | எமது புத்திரி, திருநிறை செல்வி விமலாதேவி அவர்களை |
|---|---|---|

திருவருள் துணைகொண்டு தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் திருமணம் செய்து கொள்ள இருப்பதால் அவ்வேளை தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்:

வரவேற்புபசாரம்: மணமகன் இல்லம் 22 - 08 - 89 மாலை 3 00 — 6 00 வரை
மணமகள் இல்லம் 23 - 08 - 89 மாலை 3.00 — 6.00 வரை

தங்கள் நல்வரவை நாடும்:

திரு. க. இராசரத்தினம்,
சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

திரு. திருமதி சி. துரையப்பா,
''கௌரி ரவல்ஸ்''
ஸ்ரேசன் ரோட்,
சுன்னாகம்.

(சி/3234)


★ கம்யூனிஸ்ட் அல்லாத

## சொலிடாரிக்கட்சிபிரதமர்தலைமையில் போலந்தில் புதிய அமைச்சரவை!

வார்சோ, ஆக 20

போலந்து நாட்டில் இந்த நூற்றுண்டிலேயே முதல் தடவையாக கம்யூனிஸ்ட் அல்லாத அமைச்சரவை அமைக்கப்பட்டிருக்கிறது:

சொலிடாரிட்டி தொழிற் சங்கத் தலைவர்களில் ஒருவரான திரு: மதிஜெவஸ்கியை ஜனாதிபதி ஜருஸெல்ஸ்கி நேற்றுப் பிரதமராக நியமித்ததன்மூலம் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் புதிய சாதனை படைக்கப்பட்டது:

இந்த நியமனத்தைச் செய்யும்முன்னர் போலந்து கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை வகுக்கும் அரசியல்குழு கூடி நிலைமையை ஆராய்ந்தது:

அதன்பின்னர் கம்யூனிஸ்ட் அல்லாத ஒருவரைப் பிரதமராக நியமிக்கும்முடிவை ஜனாதிபதி எடுத்தார்:

பரந்த அடிப்படையிலான சகல அரசியல் கட்சிகளும் அங்கம் வகிக்கும்கூட்டணி அரசை ஏற்படுத்துவதன்மூலம்போலந்தின் பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காணலாம் என்று ஜனாதிபதி நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

கம்யூனிஸ்ட் அல்லாத அரசு போலந்தில் அமைக்கப்படுவதை ஹங்கேரி, ஆஸ்திரிய நாடுகள் வரவேற்றுள்ளன. கிழக்கு ஜேர்மனி, செக்கோஸ்லேவேகியா ஆகியன அதிருப்தி தெரிவித்துள்ளன:

சோவியத் யூனியன் அரசோ போலந்து விவகாரத்தில் தலையிடப்போவது இல்லை என்று அறிவித்திருக்கிறது (எ)

### ஐந்தாவது தடவையாக தூக்கில் இருந்து தப்பியவர்

புதுடில்லி, ஆக: 20

முக்கொலைகளைப் புரிந்த ஒருவருக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனை நிறைவேற்றப்படுவது ஐந்தாவது தடவையாக புதுடில்லி உயர்நீதிமன்றத்தால் ஒத்திவைக்கப்பட்டது.

குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த சசிகாந்த்சேஷவ்லால் பர்மர் என்பவருக்கு 31- 7- 81இல் மரணதண்டனை விதிக்கப்பட்டது.

இவரின் சார்பாக அனுப்பப்பட்ட கருணை மனுக்களை ஜனாதிபதி நிராகரித்ததைத் தொடர்ந்து மரணதண்டனை நிறைவேற்றப்படுவது ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

நான்குமுறை மரண தண்டனை நிறைவேற்றப்பட திகதி நிச்சயிக்கப்பட்டது.

ஐந்தாவது முறையாகக் கடந்த வெள்ளிக்கிழமை மரணதண்டனை நிறைவேற்றப்பட இருந்தது.

புதன்கிழமை பிரதம நீதியரசருக்கு கருணை மனு ஒன்று டெலக்ஸ் செய்திமூலம் குஜராத் மாநில முன்னாள் முதலமைச்சர் பாபுபாய் பட்டேல் அனுப்பியிருந்தார்:

டெலக்ஸ் செய்தியை ரிட் மனுவாக உயர்நீதிமன்றம் ஏற்று மரணதண்டனை நிறைவேற்றத்தை ஒத்திவைத்தார். (எ)

## பகிஷ்கரிப்பு தொடரும் என ஜெயலலிதா அறிவிப்பு

சென்னை, ஆக 20

தமிழ் நாடு சட்ட சபைக் கூட்டங்களைத் தொடர்ந்து பகிஷ்கரிக்கப் போவதாக அ. தி.மு.க. பொதுச்செயலாளர் செல்வி. ஜெயலலிதா அறிவித்திருக்கிறார்:

சட்டசபையில்பாதுகாப்புத் தரப்படும் என்று உறுதிமொழி வழங்கப்படும் வரை பகிஷ்கரிப்புத் தொடரும் என்று செல்வி ஜெயலலிதா தெரிவித்தார்:

முதலமைச்சர் கருணாநிதியோ சபாநாயகர் தமிழ்க்குடிமகனோ அப்படியான உறுதிமொழியை எனக்கு வழங்கவில்லையே என்றும் ஜெயலலிதாகூறினார்:

கடந்த மார்ச் 25 ஆம் திகதி தமிழக சட்டசபையில் குழப்பம்ஏற்பட்டு ஜெயலலிதா தாக்கப்பட்டார்.

அன்று தொடக்கம் ஜெயலலிதா சபையைப் பகிஷ்கரித்துவருகிறார் என்பதுகுறிப்பிடத்தக்கது (எ)

### ஆப்கன் கெரில்லாக்களுக்கு மரண தண்டனை

இஸ்லாமபாத், ஆக; 20

எட்டு ஆப்கன் கெரில்லாக்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை பகிரங்கமாக நிறைவேற்றப்பட்டது,

பழங்குடி மக்களிடம் கொள்ளையடித்தது, அவர்களில் 11 பேரைக் கொன்றது ஆகிய குற்றச் செயல்களைப் புரிந்ததற்காக கெரில்லா அமைப்பு இத்தண்டனையை விதித்தது: (எ)

### தமிழக மேலவை

சென்னை, ஆக. 20

தமிழக மேலவையைத் திருப்பி அமைக்கும் சட்டமூலம் தற்போது நடந்து முடிந்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் நிறைவேற்றப்படவில்லை.

இந்தத் தொடரில் நிறைவேற்றப்படும் என்று தி.மு.க. அரசு எதிர்பார்த்திருந்தது. ஆனால்அது நடைபெறவில்லை.

எம். ஜி. ஆர்.ஆட்சிக்காலத்தில் தமிழக மேலவை ஒழிக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது. (எ)

### ராஜீவ் அரசுக்கு உரிமை இல்லை

கல்கத்தா, ஆக 20

ராஜீவ் அரசு பதவியில் நீடிக்க எந்த உரிமையும் கிடையாது என்று இந்து நாளிதழ் இணையாசிரியர் என். ராம் தெரிவித்தார்:

கல்கத்தாவில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் திரு. ராம் பேசுகையில் மேலும் சொன்னதாவது;

போபேர்ஸ் பீரங்கி பேர ஊழல் முதல்தரமான தேசிய ஊழல் ஆகும்.

இதே ஊழல் வேறு நாட்டில் நடந்திருந்தால் ஆட்சியாளர்கள் சொல்லாமல் கொள்ளாமல் ராஜினாமாச் செய்திருப்பார்கள். இந்த ஊழலை மறைக்க அசிங்கமான முயற்சிகளை மத்திய அரசு மேற்கொண்டு இருக்கிறது.

இப்படி திரு. ராம் சொன்னார். (எ)

● அஸாம் கிளர்ச்சி

## முத்தரப்புப் பேச்சுக்களுக்கு போடோ மாணவர் இணக்கம்

ஷில்லொங், ஆக; 20

முத்தரப்புப் பேச்சுக்களில் நடத்த அஸாம் மாநிலத்தில் உள்ள போடோ இன மாணவர் அமைப்பு சம்மதித்திருக்கிறது.

சில நிபந்தனைகளை முன்வைத்து பேச்சுக்களை நடத்தப் போவதாக போடோ மாணவர் அமைப்பு அறிவித்திருக்கிறது:

இம்மாதம் 21 ஆம் திகதி நடத்தவிருந்த 1,001 மணித்தியால வேலை நிறுத்தப் போராட்டத்தையும் போடோ மாணவர் கைவிட்டனர்.

அஸாமில் போடோ இன மக்களுக்குத் தனிநாடுகோரி, போடோ மாணவர் அமைப்பு போராடி வருவது தெரிந்ததே! (எ)

## முஜிபுரைக் கொன்றவர்கள் மீது வழக்கு விசாரணை!

### மகள் ஹஸீனா அறிவிப்பு

டாக்கா, ஆக 20

பங்களாதேஷின் 'தந்தை' என்றழைக்கப்படும் ஷேக் முஜிபுர் ரஹ்மானைக் கொலை செய்தவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவர் என்று அவாமி லீக் தலைவர் ஷேக் ஹஸினா தெரிவித்திருக்கிறார்.

ஷேக் ஹஸினா முஜிபுர் ரஹ்மானின் புதல்வி ஆவார்.

டாக்காவில் குலிஸ்தான் சதுக்கத்தில் நடந்த ஷேக் முஜிபுர் ரஹ்மான் நினைவு தினக் கூட்டத்தில் கலந்து கொண்டுபேசுகையில் ஹஸினா இதனைத் தெரிவித்தார்

தந்தையைக் கொலை செய்தவர்களை பங்களாதேஷ் ஜனாதிபதி எர்ஷாத்பாதுகாத்து வருகிறார்.

எர்ஷாத் அரசு 'வங்கபந்து'வைக்கொலைசெய்தவர்களுக்கு [illegible] அதே சமயம் 'வங்கபந்து'வின் [illegible] விடவும்முயற்சித்துவருகிறது.

இப்படி ஷேக் ஹஸினா சொன்னார். (எ)

### காஷ்மீரில் வன்செயல்

ஸ்ரீநகர், ஆக. 20

பாகிஸ்தானில் பயிற்சி பெற்ற காஷ்மீர் தீவிரவாதிகள் பஸ் ஒன்றைக் கடத்திச் சென்று குண்டு வைத்துத் தகர்த்தனர்.

காஷ்மீர் வடக்கே கன்விஹாமா என்ற இடத்தில் இச் சம்பவம் இடம்பெற்றது.

பயணிகளை இறக்கிய பின்னர் பஸ்ஸுக்குக் குண்டு வைக்கப்பட்டது: (எ)


### 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பூவுலகில்:
23 - 01 - 1961

அமரருலகில்:
31 - 08 -1988

திதி: 21 - 8 - 1989

செல்வி
சின்னையா செந்தாமரைச்செல்வி
(பேபி)
(உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை பழைய மாணவி)

எம் இனிய மகளே, எங்கு சென்றாயோ? குடும்பத்தின் ஒளிவிளக்காய், அறிவின் சுடரொளியாய், பாசத்தின் பிறப்பிடமாய்; பொறுமையின் உறைவிடமாய் எமக்கெல்லாம் ஒளிவீசி இடையில் எம்மை மீளாத ஆறுத்துயரில் ஆழ்த்தி விட்டகன்ற எங்கள் அன்புத் தெய்வமே! இன்றைய ஓர் ஆண்டை நினைவு கூர்ந்து உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்:
அன்புத் தந்தை சி. சின்னையா,
தாய்- ஈஸ்வரி,
சகோதரன்- ரவிந்திரன்.

உரும்பராய்
வடக்கு
உரும்பராய்

(1663)



உடனடி
## வேலை வாய்ப்பு

★ சவூதி அரேபியா (Saudi Arabia)

S. O. M. C, Afras, Al Rajah
கொம்பனிக்கு
பின்வரும் வெற்றிடங்கள் உண்டு.
உடன் தொடர்பு கொள்ளவும்.

- ★ கிளீனேர்ஸ் (Cleaners)
- ★ கூலி வேலையாட்கள் (Labourers)
- ★ சாரதிகள் (Drivers)
- ★ மேசன் (Mason)
- ★ தச்சு வேலை (Carpenter)
- ★ பிளம்பர் (Plumber)
- ★ மின் தொழில் செய்பவர் (Electrician)
- ★ வெல்டர்ஸ் (Welders)
- ★ பெயின்ரேர்ஸ் (Painter)
- ★ மெக்கானிக்ஸ் (Machanics)
- ★ H. O. Operators
- ★ டயர் பிற்றர் (Tyre Fitter)
- ★ பிற்றர்ஸ் (Fitters)
- ★ சிவில் பொறியியலாளர் (Civil Engineers)
- ★ எழுதுவினைஞர் (Clearks)
- ★ மேற்பார்வையாளர் (Supervisor)
- ★ பவர் பிளான்ற் ஒப்பறேற்றர்ஸ் - (Power Plant Operator)

தயவு செய்து வெளிநாடு செல்பவர்கள் சவூதி அரேபியா தவிர வேறு எந்த நாட்டிற்கும் கடவுச் சீட்டு கொடுக்க வேண்டாம்.

மற்றும்

கடவுச்சீட்டு, 5 படம். அனுபவச்சான்றிதழ் கொடுத்தால் மட்டும் போதும்

★ எதுவித பணமும் கொடுக்க வேண்டாம்

வயது: 21 – 48 வரை

புதிய முகவரி:

T. V. TRAVELS & TOURIST
Sivan Pannai Road,
Koddady Junction,
JAFFNA.

[சி-3525]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## இயங்கம்வேர் தைலம்

இத்தைலம் தேகத்தில் உண்டாகும் சகல விதமான சொறி, சரப்பன், சிரங்கு, புண், கடி, குஸ்டம், கிரந்தி, குலை வண்டுகடி, சில விசம் முதலிய வியாதிகளுக்குப் பூரிவரக் குணமாகும்.

2 அவு. போத்தல் விலை 10/-

கிடைக்குமிடம்.

க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்

மருந்துக்கடை

76, பெரியகடை, யாழ்ப்பாணம்.



# உதயன்

21 08 1989 திங்கட்கிழமை



## வேல்படை மருந்து

இப்படை மருந்து தேமல், கக்கூஸ்பற்று, சொறி, சிரங்கு, சரப்பன், பூச்சிக்கடி, முதலிய சகல ரோகங்களையும் குணமாக்கும்.

1 பெரிய டப்பி 12/-

1 சின்ன டப்பி 6/50

கிடைக்குமிடம்.

க. செ. கைலாசம்பிள்ளை & சன்ஸ்

மருந்துக்கடை

(5) 76, பெரியகடை, யாழ்ப்பாணம்;


### அமைதிப்படை வெளியேறினால்--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தி இருக்கிறது:

அமைதிப்படையை விலக்கிக் கொள்வது பற்றி இலங்கை அரசுடன் இன்னமும் இந்தியா பேச்சுக்களை நடத்தி வருகிறது'' —

— இப்படி பிரதமர் காந்தி மேலும் தெரிவித்தார்.

(உ-எ-ச)

## பண்டிதமணி பெயரில் அறக்கட்டளை

### உபவேந்தர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 21

தமிழ்-சைவப் பணியாற்றிய பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் பெயரில் பல்கலைக் கழகத்தில் அறக்கட்டளை ஒன்று ஆரம்பிப்பதன் மூலம் வருடாவருடம் நினைவுப் பேருரைகள் நடத்தவும், மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கவும் வாய்ப்பு ஏற்படும். பண்டிதமணியுடன் இணைந்தவர்கள் இதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு பல்கலைக்கழகமும் பூரண ஒத்துழைப்பு வழங்கும்'

-இப்படிக் கூறினார் யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா.

கைலாசபதி அரங்கில் நேற்றுக் காலை இடம்பெற்ற பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் நினைவு தின விழாவில் கலந்து அவரது உருவப்படத்தைத் திரை நீக்கம் செய்து வைத்துப் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நேற்றுக் காலை பல்கலைக்கழகத்தில் உள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் இருந்து நாகசுர இசையுடன் பண்டிதமணியின் நூல்கள் கைலாசபதி அரங்கிற்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன.

கலைப் பீடாதிபதி நா. பாலகிருஷ்ணன், வைத்திய பீடாதிபதி வி. க. கணேசலிங்கம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர்.

இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் நிகழ்ச்சிக்கு தலைமை வகித்தார்.

இவ்விழாவில் உரையாற்றுகையில் உபவேந்தர் மேலும் கூறியதாவது:-

தமிழ் - சைவ வளர்ச்சிக்கு உழைத்து வரும் இப்பல்கலைக் கழகத்தில், இத்துறைகளுக்கு சேவையாற்றிய பெருமகனின் நினைவு நாள் கொண்டாடுவது சாலப்பொருத்தமான காரியம்;

பண்டிதமணியின் ஆக்கங்கள் சிந்தனைகள் குறித்து தற்சமயம் பல ஆய்வுகள் பல்கலைக்கழக மட்டத்தில் நடைபெறுகின்றன. மேலும் ஆய்வுகள் மேற்கொள்ள பல்கலைக் கழகம் உதவும் -என்றார்.

(உ-3)

### ஆஸ்பத்திரி வார்ட்டில் அழுகிய சடலங்கள்!



கொழும்பு ஆகஸ்ட் 21

கொழும்பு தெற்கு (களுபோவில) ஆஸ்பத்திரியில் பதினேழாம் வார்டில் ஒரு குழந்தையின் சடலமும் ஆறாம் அறையில் ஒரு வயோதிபருடைய சடலமும் அழுகிய நிலையில் கிடக்க காணப்பட்டன.

கடந்த 11 ஆம் திகதி வெள்ளிக் கிழமை ஆஸ்பத்திரி ஊழியர்கள் அனைவரும் 17 ஆம்வார்டைப் பூட்டிவிட்டு அவசர அவசரமாக வெளியேறிவிட்டனர். அதன் பின்னர் அவர்கள் வேலைக்குத் திரும்பவில்லை

குழந்தையின் பெற்றோர் மூடியிருந்த வார்ட்க்கு முன்னால் நின்று அழுததைத் தொடர்ந்து கதவுதிறக்கப்பட்டது.

உள்ளே சென்று பார்த்த போது குழந்தையின் சடலம் அழுகிய நிலையில் கட்டிலில் காணப்பட்டது.

அதே போன்று வயோதிபரின் சடலம் ஆறாம் அறையைத் திறந்து பார்த்தபோது கண்டுபிடிக்கப்பட்டது இரண்டு சடலங்களும் கடந்த சனிக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டன.

தீவிரவாதிகளின் எச்சரிக்கையை அடுத்து ஆஸ்பத்திரியில் வார்ட்டுகள் திடீரென மூடப்பட்டன என்பது தெரிந்ததே.

(ஒ- எ)

## 91 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு:

18: 10- 1932



மறைவு:

23- 05- 1989

### திரு. சின்னத்தம்பி முருகையா

(உரிமையாளர், சிறீ முருகன் ஸ்ரோர்ஸ் காங்கேசன்துறை)

எங்கள் இதயங்களில் குடி கொண்டு விட்ட எமது அருமைத் தந்தையே! எங்கு குடி கொண்டீர்? எதற்காக எம்மை ஆருக்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொள்ளச் சென்றீர்? மரணம் என்பது எல்லா மானிடருக்கும் உண்டு; அதற்காக இப்படி ஒரு மரணமா? பொருள் தேடி வந்தாலும் பொய்யான வாழ்வு வாழ நீங்கள் நினைத்தது இல்லை ஒருவருக்கும் தீங்கு இழைக்க ஒரு போதும் நினைக்காத நீங்கள் தெய்வமாகி விட்டீர்களே! என்றும் உங்கள் நினைவு எம்மை விட்டு நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தியடைய விநாயகப் பெருமானை இறைஞ்சி நிற்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடி நிற்கும்

**மனைவி, பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளை, உற்றார், உறவினர், நண்பர்கள்.**

சிறீமுருகன் இல்லம்,
இடந்தரை ஒழுங்கை,
காங்கேசன்துறை.

(1649)

### ரஞ்சன் வல்வைக்கு வந்தார்--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேசினார்.

பின்னர் வல்வெட்டித் துறைக்கு அமைச்சர் குழு சென்றது;

அமைதிப்படையின் பாதுகாப்புடனேயே அமைச்சர் ரஞ்சன் வல்வையில் பாதிப்புற்ற இடங்களின் ஒரு பகுதியை பார்வையிட்டதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

நண்பகல் 12 மணியளவில் ஸ்ரீலங்கா பொலீஸ் அதிகாரிகள் மூலம் வல்வைப் பிரஜைகள் குழுவுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து அப்பகுதி பிரமுகர்கள் சிலருடன் பிரஜைகள் குழுப் பிரதிநிதிகள் வல்வெட்டித்துறை இராணுவ முகாமுக்குச் சென்றனர்.

வல்வைப் பிரஜைகள் குழுத் தலைவர் திரு. எஸ். செல்வேந்திரா, செயலாளர் திரு. வி. ஆனந்தராஜா தவிர ஏனையோர் முகாமிற்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

அனுமதி மறுக்கப்பட்டவர்களில் பருத்தித்துறை பிரசைகள் குழுப் பிரதிநிதிகளும் அடங்குவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

வல்வைப் பிரசைகள் குழுவின் தலைவரும், செயலாளரும் முகாமிற்குள் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினவுடன் கலந்துரையாடினர்.

தமது பகுதியில் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் குறித்து அவர்கள் உரையாடியதாகத் தெரிவிக்கப்பட்டது.

வல்வை விஜயத்தை முடித்துக்கொண்டு அமைச்சர். இந்தியத் தூதர் சகிதம் மன்னார் ஆதார வைத்திய சாலைக்கு விஜயம் செய்தார்.

(உ-எ-160)

### யுத்த நிறுத்தம்..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

நன்கு உணர முடிகிறது.

இனிமேல் இத்தகைய சம்பவங்கள் நடைபெறாது என எனக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு, கிழக்கில் விரைவில் யுத்த நிறுத்தம் ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுப்பேன். இந்த நடவடிக்கைகளுக்கு பல தரப்புகளில் இருந்தும் ஒத்துழைப்புத் தேவை. பிரசைகள் குழுக்களும் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும் - இப்படி அமைச்சர் தெரிவித்ததாக பிரசைகள் குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-160)

### மற்றொரு அணி இன்று விலகும்?

இந்திய அமைதிப்படையின் இன்னொரு பிரிவு இன்று காங்கேசன்துறையில் இருந்து தாயகம் திரும்பவிருப்பதாக இலங்கை வானொலி நேற்று அறிவித்தது.

(உ-எ)

### ஜனநாயகத்தை .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீதத்தினால் குறைக்க வேண்டும் என்றும் சர்வதேச நாணய நிதியம் வற்புறுத்துகிறது:

நாட்டில் பதற்றமான அரசியல் நிலைமை, அனுவசிய கொலைகள் இடம்பெறுவது குறித்தும் சர்வதேச நாணய நிதியம் கவலை தெரிவித்திருக்கிறது.

இதனிடையில் — சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் குழு ஒன்று இன்று (திங்கள்) கொழும்பு வருகிறது. திறைசேரி மற்றும் வங்கி அதிகாரிகளுடன் இக்குழு பேச்சுக்களை நடத்த உள்ளது.

(ஒ-எ)

## மத்திய அரசு, மாகாண அரசு என்று அழைக்கக்கூடாது

மத்திய அரசாங்கம், மாகாண அரசாங்கம் என்றெல்லாம் அழைக்கக்கூடாது என்று சட்டமா அதிபர் தனது திணைக்கள அதிகாரிகளைப் பணித்திருக்கிறார்.

இதுசம்பந்தமாக விடுக்கப்பட்டுள்ள சுற்றுநிருபம் ஒன்றில் சட்டமா அதிபர் கூறியிருப்பதாவது:

அரச சட்டத்தரணிகள் நீதிமன்றங்களில் அரசாங்கத்தை மத்திய அரசாங்கம் என்றழைக்கக்கூடாது. மாகாண சபைகளை மாகாண அரசாங்கம் என்று அழைக்கக் கூடாது.

அரசாங்கத்தை அரசாங்கம் என்று மட்டுமே அழைக்க வேண்டும்; மாகாண சபைகளை மாகாண சபைகள் அல்லது மாகாண நிர்வாகம் என்று மட்டுமே அழைக்க வேண்டும்.

### ஒப்பரேசன் லிபரேசனில்--

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

பட்ட மக்களை பார்வையிட வந்திருப்பது பெரும் கேலிக் கூத்தாகும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு - கிழக்கை தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்கு சென்று, பாதிக்கப்பட்ட மக்களை பார்வையிடுவதற்கு முப்படைகளாலும் அமைச்சருக்கு பாதுகாப்பு கொடுக்க முடியாத சூழ்நிலையே நிலவி வருகின்றது. மொத்தத்தில் அரசு தனது செயற்பாட்டை இழந்த நிலையில் வெளிநாட்டுத் தொலைத்தொடர்பு சாதனங்களின் கண்களுக்கு வடக்கு கிழக்கு நிலைமைகளைப் பெரிதுபடுத்திக் காட்டுவதன் மூலம் உண்மையான தென்னிலங்கை நிலவரத்தை மூடி மறைத்து, மக்களின் கவனத்தை வேறு பக்கம் திசை திருப்ப முனைகின்றனர்.

சர்வதேச விதி முறைகளையும், கோட்பாடுகளையும் மீறி மன்னார் ஆஸ்பத்திரி நோயாளர்களை அரணாக பயன்படுத்தி அருவருக்கத்தக்க முறையில் இந்திய அமைதிப்படையினர் மீது நடாத்தப்பட்ட தாக்குதலை கண்டிக்கத்தன்னும் திராணியற்ற அமைச்சர், தமிழ் பேசும் மக்களுக்காக நீலிக் கண்ணீர் வடிக்க வடமராட்சிக்கு வந்த சமயம், அங்கு அவரது அரசால் கடந்தகாலத்தில் மேற்கொள்ளப்பட்ட 'லிபரேசன் ஒப்பரேசன்' நடவடிக்கையினால் ஏற்பட்ட கொடூர நிகழ்வுகளையும், பாதிக்கப்பட்ட இடங்களையும், இறந்தவர்களின் குடும்பங்களையும், சிரச்சேதம் செய்யப்பட்ட இளைஞர்களையும் பார்வையிட்டுச் சென்றிருக்கலாமே!

இனவாத கண்ணோட்டத்துடன் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்க மறுத்த இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ரத்து செய்து, மீண்டும் தமிழ் பேசும் மக்கள் மீது தர்பார் நடத்த முனைப்புடன் செயலாற்றும் யு.என்.பி. அரசுக்கும் அதன் அமைச்சர்களுக்கும், பிரசாரத்துக்கு களம் அமைத்துக் கொடுக்க முற்பட்டுள்ள தமிழர் விரோத சக்திகளுக்கு வரலாறு சரியான பாடத்தைப் புகட்டும்—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது;


## எமது புதிய வெளியீடுகள்

(1) ராம்கி - சீதா - S.S. சந்திரன் நடித்த

### ஒரு தொட்டில் சபதம்

(ஒறிஜினல்)

(2) மோகன் - ரேகா - செந்தில் நடித்த

### தலைவனுக்கோர் தலைவி

(ஒறிஜினல்)

**வீடியோ விமல்**

117, மானிப்பாய் வீதி.
ஐந்துசந்தி யாழ்ப்பாணம். (12742)


## மரண அறிவித்தல்கள்

### திரு. தம்பு வல்லிபுரம்

யா/ கோப்பாய் வடக்கைச் சேர்ந்த திரு. தம்பு வல்லிபுரம் 20 - 8 -89 அன்று காலமானார்: இவர் இரத்தினத்தின் அன்புக்கணவரும், தவமணி, தவராஜலிங்கம் (நீர்வேலி ப. நோ கூ. ச), நாகேஸ்வரி, வசந்தாதேவி, (யாழ். அரசினர் வைத்தியசாலை), சிவபாலசுப்பிரமணியம் (மேற்கு ஜேர்மனி), சித்திரவேலாயுதம் (மேற்கு ஜேர்மனி), செல்வம் (சுவிற்சலாந்து), காலஞ்சென்ற இராமலிங்கத்தின் அன்புத் தந்தையும், திரு. சிவசுப்பிரமணியம், திரு. சித்திரவேலாயுதம், திரு. கந்தசாமி, திருமதி. நிரஞ்சனி, காலஞ் சென்ற திருமதி. சரஸ்வதி, ஆகியோரின் அன்பு மாமனாரும், தனுஷியா, காந்தரூபன் சுரேஷ்குமார், விஷ்ணுசகரன், இரகுராஜன், இராஜராஜேஸ்வரி, இரத்தினேஸ்வரி ஆகியோரின் பேரனுமாவார்:

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 21 - 8 - 89 இன்று மு. ப 10 - 00 மணியளவில் கோப்பாய் வடக்கு மயானத்தில் நடைபெறும்: உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

**மனைவியும், பிள்ளைகளும்**

(1571)

### திரு. பொன்னையா நடராசா

(நெடுந்தீவு மேற்கு)

18 - 08 - 89 ஆம் திகதி வெளியாகிய மேற்கூறப்பட்டவரின் மரண அறிவித்தல் தொடர்பாக:-

அன்னாரின் ஈமக்கிரியைகள் 22-08-89 (செவ்வாய்க்கிழமை) காலை 8.00 மணியளவில் கீழ்க்காணும் விலாசத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்;

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்:

தகவல்;

ந. குணசிங்கம்.

63/2, மலர்மகள் வீதி;
அரியாலை,
யாழ்ப்பாணம்;

பிற்குறிப்பு:- அன்னார் திரு: வை: முத்துக்குமாரு (தொழிற் கந்தோர், கிளிநொச்சி) அவர்களின் மைத்துனருமாவார்;

(11741)

## ஓராண்டு நினைவஞ்சலி



மறைந்தும் மறையாத

### திரு. கணபதி தியாகேசு அவர்கள்

(காங்கேசன் சீமெந்து கூட்டுத்தாபன மின் ஊழியர்)

மண்ணில்;
07 - 01 - 1931

விண்ணில் :
31 - 08 - 1988

ஓராண்டு ஓடி மறைந்தாலும் உங்கள்
நினைவு எங்கள் நெஞ்சத்தில் ஓயாமல்
அலை மோதிக் கொண்டிருக்குதையா
உங்கள் ஆத்மா சாந்தியடைய
உங்கள் பாதங்களில் நித்தமும்
மலர்கள் சொரிகின்றோம்.

உங்கள் பிரிவால் துன்புறும்:

அன்பு மனைவி, பிள்ளைகள், பெரு மக்கள்,
சகோதரிகள், மைத்துனர்மார்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஆதியாமலை,
நப்பிட்டி:

(1574)


### தபால் மூலம் ஆங்கிலம்

படித்தா பலரினால் பாராட்டப்பெற்ற தபால் மூலம் ஆங்கிலம் மூன்றே மாத காலத்தில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க முடியும் விபரங்கட்கு முத்திரை யொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

**BRIGHT TRAINING CENTRE.**

P.O; Box 162, Colombo

(சி/ 3521)



தனது பொன் விழாவையொட்டி

### இலங்கை வங்கி அளிக்கும்

## ஒரு மகத்தான சேவை

அடியார்கள் நலன் கருதி
நல்லைக் கந்தன் ஆலய முன்றலிலே
வங்கிச் சேவைகளுக்காக
ஒரு கருமபீடம் அமைக்கப்பட்டுள்ளது.

கருமமாற்றும் காலம்:- 21-08-89 முதல் 30-08-89 வரை

நேரம்: - தினமும் காலை 9.00மணி முதல் மாலை 5.00 மணி வரை

நடைபெறும் சேவைகள்:

1. சேமிப்புச் சான்றிதழ் விற்பனை
2. சாதாரண மற்றும் சிறுவர் சேமிப்புக் கணக்குகள் ஆரம்பித்தல்
3. வெளிநாட்டுக் காசோலைகளைப் பரிவர்த்தனைக்காக ஏற்றுக்கொள்ளல்

மேற்குறிப்பிட்ட திகதிகளில் இக்கருமபீடத்தில் சேமிப்புச் சான்றிதழ்களைக் கொள்வனவு செய்வோருக்கு அதிர்ஷ்டப் பரிசுகளும் காத்திருக்கின்றன.

[சி-3235]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் ... 21-8-1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.